
416

# ாபியா பஸ்ரீ

2-16 / 2-61.



OFFICE OF THE REGISTRAR
1 MAY 1961
MA...

97:3
N61
111398

தி பதிப்பகம்
ணூர்... திருச்சி

ஹஸ்ரத்

# ராபியா பஸ்ரீ

ரஹ்மத்துல்லாஹி அலைஹி

★


ஆசிரியர் :

ஸையத் இப்ராஹீம், எம். ஏ., எல். டி.,

ஜமால் முஹம்மத் கல்லூரி,

திருச்சிராப்பள்ளி.


★


வளர்மதி பதிப்பகம்

34, இஸ்லாமியாபுரம்

தென்னூர், திருச்சிராப்பள்ளி.



உரிமைப் பதிவு]


[விலை: ரூ. 0—75

# பெண்மையின் பெருமை

## குர்ஆன் வசனங்கள்

1. உங்களில் ஆண் பெண் (இருபாலாரிலும்) எவர்கள் நன்மை செய்த போதிலும் நிச்சயமாக அதை நான் வீணாக்கி விடமாட்டேன். (ஏனென்றால்) உங்களில் (ஆணாகவோ பெண்ணாகவோ இருந்தபோதிலும்) ஒருவர் மற்றொருவரில் உள்ளவர்தான். (எனவே, கூலி கொடுப்பதில் ஆண் பெண் என்ற பாகுபாடில்லை.) குர்ஆன்—ஆல இம்ரான். 3 : 195.

2. ஆகவே, ஆணாயினும் பெண்ணாயினும் எவர்கள் மெய்யாகவே விசுவாசங்கொண்டு, நற்கருமங்களைச் செய்கின்றார்களோ, அவர்கள் தான் சுவனபதி செல்வார்கள். அவர்கள் அற்ப அளவும் அநீதி செய்யப்படமாட்டார்கள். குர்ஆன். அந்நிஸா—பெண்கள். 4 : 124.

3. ஆணாயினும் பெண்ணாயினும் விசுவாசங்கொண்டு நற்கருமங்களை எவர் செய்தாலும், நிச்சயமாக நாம் அவர்களை (இம்மையில்) நல்ல வாழ்க்கையாக வாழச்செய்வோம் அன்றி (மறுமையிலே) அவர்கள் செய்துகொண்டிருந்ததைவிட, மிக்க அழகான கூலியையே நிச்சயமாக நாம் அவர்களுக்குக் கொடுப்போம். குர்ஆன். அந்நஹ்ல்—தேனீ. 16 : 97.

4. எவனாயினும் தீங்குசெய்தால், அதைப்போன்ற தீங்கே அன்றி (அதற்கதிகமாய்) அவனுக்குக் கூலியாகக் கொடுக்கப்படமாட்டாது. அன்றி, ஆணோ, பெண்ணோ எவர் விசுவாசங்கொண்டு நற்கருமங்களைச் செய்கின்றார்களோ, அத்தகையோர் சுவனபதியில் நுழைந்துவிடுவார்கள். குர்ஆன். மூமின்—விசுவாசி 40 : 40.

5. நிச்சயமாக, முஸ்லிம் ஆண்களும் பெண்களும், விசுவாசியான ஆண்களும் பெண்களும், (இறைவனுக்கு) வழிபடும் ஆண்களும் பெண்களும், உண்மையே கூறும் ஆண்களும் பெண்களும், பொறுமையுள்ள ஆண்களும் பெண்களும், (அல்லாஹ்வுக்கு) பயந்து நடக்கும் ஆண்களும் பெண்களும், தானம் செய்யும் ஆண்களும் பெண்களும், நோன்பு நோற்கும் ஆண்களும் பெண்களும் கற்புள்ள ஆண்களும் பெண்களும், அல்லாஹ்வுடைய திருநாமத்தை அதிகமாக ஸ்தோத்தரிக்கும் ஆண்களும் பெண்களும், ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் சித்தப்படுத்தி வைத்திருக்கிறான். குர்ஆன். அஹ்ஸாப்—இராணுவங்கள். 33 : 35.

# முன்னுரை

அறுசுவை உணவுகளை அருந்தல், இடுப்பிலே விரும்பிய உடைகளை எல்லாம் உடுத்தல், மேடை மாளிகைகளிலே அமர்தல், இரவும் பகலும் உடலின்ப வாழ்விலே இருத்தல் முதலியன உலகநெறி என்பர். மரவுரி உடுத்திக்கொள்ளல், கடுமையான பசியின் கொடுமையைத் தவிர்க்கக் காட்டு நெல்லினைப் பல்லினால் கோதியுண்ணல், மரங்களிலிருந்து உதிர்கின்ற சருகுகள் வாயில் வீழ்ந்தால் அவற்றைத் தின்னல், தீயிலும், வெயிலிலும் மழையிலும் உடலை வதைத்தல், உடலின்ப வாழ்வினை வெறுத்தல், அறிவின்பத்தை விரும்பல் முதலியன தவநெறியென்பர்.

இஸ்லாமிய நெறி இவ்விரண்டும் கலந்ததாகும். எந்த நிலைமையில் இருந்தாலும், எத்தன்மையான போகத்தை நுகர்ந்தாலும், இறையருளை, இறையின்பத்தை, இறைநேசத்தை மறவாத வாழ்வே, மேலானதென்று இஸ்லாம் கூறுகிறது. ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் உமர், ஹஸ்ரத் அலி போன்ற நபிகள்நாதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களது தோழர்களெல்லாம் உலகநெறியோடு தவநெறி கலந்த வாழ்க்கை நடத்தினார்கள். போக நெறியிலும், ஞான நெறியிலும், சித்தி நெறியிலும், முத்தி நெறியிலும் பக்தி நெறியைப் பெறுதல் வேண்டும்.

மனிதனிடம் மிருக இயற்கையும் வானவர் இயற்கையும் இருக்கின்றன. மிருகத்தன்மையைப் போக்கி, வானவரினும் உயர்ந்த நிலை அடைதலே மனிதனுடைய நோக்கமாதல் வேண்டும். தன்னலமற்ற பணிவுடன், மக்கள் நலனுக்காகத் தனது சக்தி அனைத்தையும் செலுத்திப் பரிபூரணனானந்தனை இறைவனது பூரணத் தன்மையை நோக்கிச் செல்லலே அவனது குறிக்கோளாதல் வேண்டும்.

இஸ்லாம் மார்க்கமானது, ஹஸ்ரத் அலீபோன்ற வீரப்பணியாளரை, ஹஸ்ரத் ஜஅபர் ஸாதிக் போன்ற சாந்த சொரூபிகளை, ஹஸ்ரத் மூஸா காஸிம் போன்ற பொறுமையாளரை, ஹஸ்ரத் பாத்திமா நாயகி போன்ற தூய்மையாளரை, ஹஸ்ரத் ராபியா பஸ்ரீ போன்ற துறவிகளை உண்டாக்கியது.

இஸ்லாமிய மெஞ்ஞானிகளெல்லாம் ஷரீயத்தை இஸ்லாமிய கோட்பாடுகளை-நிகாரிக்கவில்லை. ஒரு சமயம் ஹஸ்ரத் பாயஜீத் புஸ்தாமி (ரஹ்) ஒரு ஸூபியைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவரைப் பார்க்கச் சென்றார். பக்கத்தில் நெருங்கியவுடன் அந்த ஸூபியானவர் கிப்லாவை நோக்கி வாய் கொப்பளித்துக் கொண்டிருப்பதைக் கண்டார், "இவர் தரீகத்தில் உறுதியுடன் இருப்பாராயின் ஸுன்னத்திற்கு விரோதமாக இவ்வாறு கிப்லாவின் திசையை நோக்கித் துப்பமாட்டார்!" என்று கூறி, உடனே ஹஸ்ரத் பாயஜீத் அங்கிருந்துத் திரும்பி விட்டார்.

"ஹகீத்தின் பெரிய பெரிய விஷயங்கள் தொடர்ச்சியாக நாற்பது நாட்களாக என் மனத்தில் உதிக்கின்றன. ஆனால், அவற்றை என் மனத்தில் தங்கவிடமாட்டேன். கிதாப், ஸுன்னத் (குர்ஆன், பெருமானார் காட்டிய நெறி) இவ்விரண்டும் எனக்குப் போதுமென்று திருப்தி கொள்ளுகிறேன்" என்று அபூ ஸுலைமான் தாரானீ என்னும் தபோதனர் கூறுகிறார்.

"தன் சொல்லையும், செயலையும், எண்ணத்தையும் 'கிதாப்-ஸுன்னத்' என்ற தராசில் நிறுத்துப் பார்க்காதவன் நன்மையினின்று தீமையைப் பிரிக்கமுடியாதவனாவான்" என்றார் அபூ ஹப்ஸ் (Abu Hafs) என்னும் ஞானசிரியர்.

"கிதாப் ஸுன்னத், இவ்விரண்டிற்கும் மாற்றமான அகநிலை (பாதின்-Batin) சம்பந்தமான சொல்லை ஸூபியானவன் வெளியிடலாகாது" என்று ஹஸ்ரத்

ஸிர்ரியுஸ்ஸகதீ (ரஹ்) தெரிவிக்கிறார். ஹஸ்ரத் பஷ்ர் ஹாபி (Bashr Haatee) என்னும் ஸூபி எந்த நிலைமையிலும் ஸுன்னத்தைக் கைவிடவில்லை.

எனவே, முஸ்லிம் ஸூபிகளது வாழ்க்கை வரலாறுகள் நாம் ஸுன்னத்தைப் பின்பற்றவும், "உஸ்வத்துல் ஹஸ்னு" என்ற அல்லாஹ்வின் ஸிபாத்து—சிறப்புகளைப் பெறவும் துணையாக நிற்கின்றன.

ஹஸ்ரத் ராபியா பஸ்ரீ (ரஹ்) அம்மையார் இஸ்லாமிய சரித்திர ஆரம்பகால ஸூபிகளது வரிசையைச் சேர்ந்தவர். ஹஸ்ரத் காஜா ஹஸன் பஸ்ரீ (ரஹ்) உடைய சிஷ்யருள் ஒருவர். அப்பெரியார் ஞானோபதேசஞ் செய்யும்பொழுது, மக்கள் திரள் திரளாக வருவார்கள். எனினும், "தள்ளாத கிழவி, ஹஸ்ரத் ராபியா வந்திருக்கிறாரா?" என்று விசாரிப்பார். எத்தனையோ சாதாரண மக்கள் கூடியிருந்தாலும் மெய்யடியார் இல்லாத கூட்டம் என்ன கூட்டம்? "யானைக்குக் கொடுக்கவேண்டிய அவ்வளவு நீரையும் எறும்பின் வயிற்றில் நிரப்பிவிட முடியுமா?" என்பார்.

இச் சிறுநூலை வாசிக்கும் மாதர்களுக்கோர் விண்ணப்பம்: நீங்களே, வருங்கால மக்களின் தாய்மார்கள். உங்கள் வாழ்க்கையில் இறைநேசம் நிறைந்து காணப்படல் வேண்டும். உங்கள் வாழ்க்கையை உங்கள் மக்களும் பின்பற்றி, இறைவன் ஒருவனுடைய நேசத்தையே (இஷ்க்) பெறல் வேண்டும். குர்ஆனையும் ஸுன்னத்தையும் வழிகாட்டிகளாகக் கொண்டு வாழ்க்கை நடத்தல் வேண்டும். எல்லாம் வல்ல இறைவன் நம்மீது அருள் புரிவானாகவும். ஆமீன்.

ஜமால் முஹம்மத் கல்லூரி,
திருச்சி
231, முஹர்ரம் ஹி. 1376
30—8—1956

ஸையத் இப்ராஹீம்.

# அவ்லியாக்கள் சிலர்.

| எண் | பெயர் | பிறந்த நாடு | மரணம் ஹி | மரணம் கி. பி. | மரணமான இடம் |
| --- | --- | --- | --- | --- | --- |
| 1 | அபூ ஹாஷிம் ஸூபி (Soofi) (ரஹ்) ... | கூபா (Koofa) | 150 | 767 | |
| 2 | அபூ இஸ்ஹாக் இப்ராஹீம் பின் அத்ஹம் (ரஹ்) ... | பலக் | 161 | 777 | ஸிரியா |
| 3 | அபூ ஸுலைமான் தாவூத் பின் நஸ்ர் தாயீ (ரஹ்) ... | இராக் | 165 | 781 | பக்தாத் |
| 4 | அபூ அலீ ஷபீக் பின் இப்ராஹிம் பல்கீ (ரஹ்) ... | பலக் | 174 | 790 | கத்லான் |
| 5 | அபூ அலீ பலீல் (Faleel) பின் அயாஸ் குராஸானீ (ரஹ்) ... | மர்வ (குராஸான்) | 187 | 802 | மக்கா |
| 6 | அபுல் மஹ்பூல் மஅரூப் பின் பய்ரோஸ் கர்கீ (ரஹ்) (Abul mahfool maaroof bin Fairoz karkhi) | வாஸித் | 200 | 815 | பக்தாத் |
| 7 | அபூ ஸுலைமான் அப்துர் ரஹ்மான் பின் அத்யா தாரானீ (ரஹ்) ... | தாரான் (திமஷ்க்) | 215 | 830 | தாரான் |
| 8 | அபூதர் பஷ்ர் பின் ஹாரிஸ் ஹாபீ (ரஹ்) ... | மர்வ் | 227 | 841 | பக்தாத் |
| 9 | அபூ அப்துல்லாஹ் ஹாரிஸ் பின் அஸத் முஹாஸபீ (ரஹ்) ... | பஸ்ரா | 243 | 857 | பக்தாத் |
| 10 | அபுல் பய்ஸ் நுஃமான் பின் இப்ராஹிம் துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) ... | அகீம், எகிப்து | 245 | 859 | கராபா (எகிப்து) |
| 11 | அபூ துராப் அஸ்கர் பின் ஹஸீன் தஹ்ஷபீ ... | குராஸான் | 245 | 859 | பஸ்ரா |
| 12 | அபூ ஹாமித் அஹ்மத் பின் கிஸ்ர்வியா பல்கீ ... | பலக் | 246 | 860 | பலக் |
| 13 | அபுல் ஹஸன் ஸிர்ரி பின் முப்லிஸ் ஸகதீ ... | பக்தாத் | 253 | 867 | பக்தாத் |
| 14 | அபூ யஸீத் தய்யூர் பின் ஈஸா அல் புஸ்தாமீ (Bayazeed Bustami) ... | புஸ்தாம் | 261 | 847 | புஸ்தாம் |

| எண் | பெயர் | பிறந்த நாடு | மரணம் ஹி | மரணம் கி. பி. | மரணமான இடம் |
|---|---|---|---|---|---|
| 15 | அபூ ஹபஸ் உமர் பின் மஸ்லமா ஹத்தாத் நீஷாபூரி ... | நீஷாபூர் | 264 | 877 | நீஷாபூர் |
| 16 | அபூ பவாரிஸ் ஷாஹ் பின் ஷுஜா கிர்மானீ ... | கிர்மான் | 270 | 883 | கிர்மான் |
| 17 | அபூ ஸயீத் அஹ்மத் பின் ஈஸா கர்ராஸ் ... | பக்தாத் | 277 | 890 | பக்தாத் |
| 18 | அபூ முஹம்மத் ஸஹல் பின் அப்துல்லாஹ் தஸ்தரீ | தஸ்தர் | 283 | 896 | தஸ்தா |
| 19 | அபுல் ஹஸன் அஹ்மத் பின் முஹம்மத் நூரி ... | பக்தாத் | 295 | 907 | பக்தாத் |
| 20 | அபுல் காஸிம் ஜுனைத் பின் முஹம்மத் கவாரீரீ ... | நிஹாவந்த் | 297 | 909 | பக்தாத் |
| 21 | அபூ உஸ்மான் ஸயீத் பின் இஸ்மாயீல் ஹய்ரீ ... | ரேய் | 297 | 909 | நீஷாபூர் |
| 22 | அபூ அப்துல்லாஹ் முஹம்மத் பின் இஸ்மாயீல் மக்ரிபீ ... | ரேய் | 299 | 911 | ஸீனு |
| 23 | அபூ முஹம்மத் ரவீம் பின் அஹ்மத் ... | பக்தாத் | 303 | 915 | பக்தாத் |
| 24 | அபூ அப்துல்லாஹ் முஹம்மத் பின் அலீ தரந்நீ ... | தரந்த் | 303 | 915 | தரந்த் |
| 25 | அபூ ஹம்ஜா முஹம்மத் பின் இப்ராஹீம் பக்தாதீ ... | பக்தாத் | 289 | 901 | பக்தாத் |
| 26 | அபூ ஹம்ஜா குராஸானீ ... | நீஷாபூர் | 290 | 902 | நீஷாபூர் |
| 27 | மும்ஷாத் அலீ தீனூரீ ... | தீனூர் | 299 | 911 | தீனூர் |
| 28 | அபுல் அப்பாஸ் அஹ்மத் பின் அதா ... | பக்தாத் | 309 | 921 | பக்தாத் |
| 29 | அபூ முஹம்மத் அஹ்மத் ஜுரய்ரீ ... | ஜுரய்ர் | 312 | 924 | கராமத் |
| 30 | அபூ இஸ்ஹாக் இப்ராஹீம் பின் தாவூத் ரகீ ... | ஸிரியா | 326 | 937 | * |
| 31 | அபுல் முகீஸ் ஹுஸய்ன் பின் மன்ஸூர் ஹல்லாஜ் பய்ஸாவீ ... | பய்ஸா | * | * | பக்தாத் |
| 32 | அபூ பக்ர் முஹம்மத் பின் மூஸா வாஸிதீ ... | பர்கானு | 320 | 932 | மர்வ் |
| 33 | அபூ அலி முஹம்மத் பின் முஹம்மத் ரூத்பாரீ ... | பக்தாத் | 321 | 933 | எகிப்து |

| எண் | பெயர் | பிறந்த நாடு | மரணம் ஹி | மரணம் கி. பி. | மரணமான இடம் |
|---|---|---|---|---|---|
| 34 | அபூ பக்ர் முஹம்மத் பின் அலீ பின் ஜஅபர் பக்தாதீ கதானீ ... | கதான் | 322 | 934 | மக்கா |
| 35 | அபூ முஹம்மத் அப்துல்லாஹ் பின் முஹம்மத் மர்தஅஷ் நீஷாபூரி ... | நீஷாபூர் | 328 | 939 | பக்தாத் |
| 36 | அபூ யஅகூப் இஸ்ஹாக் பின் முஹம்மத் நஹ்ர்ஜூரி ... | நஹ்ர்ஜூர் | 330 | 941 | மக்கா |
| 37 | அபூ பக்ர் ஜஅபர் பின் யூனுஸ் ஷிப்லி ... | மிஸ்ர் | 334 | 945 | பக்தாத் |
| 38 | அபுல் கைர் ஹம்மாத் தய்னுதீ ... | தய்னுத் (எகிப்து) | 340 | 951 | |
| 39 | அபுல் அப்பாஸ் காஸிம் பின் காஸிம் மஹ்தீ ஸய்யாரீ ... | மர்வ் | 342 | 953 | மர்வ் |
| 40 | அபூ முஹம்மத் ஜஅபர் பின் முஹம்மத் நஸீர் கல்தீ ... | பக்தாத் | 348 | 959 | பக்தாத் |
| 41 | காஜா அபூ அஹ்மத் அப்தால் சிஷ்த்தீ ... | சிஷ்த் | 355 | 965 | சிஷ்த் |

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்
நஹ்மதுஹூவ நுஸல்லி அலா ரஸூலில் கரீம்

# ஹஸ்ரத் ராபியா பஸ்ரீ

## ரஹ்மத்துல்லாஹி அலைஹா

### தோற்றுவாய்

அரப் நாட்டிலே, இராக் மாகாணத்திலே, பஸ்ரா நகரிலே, ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே, ஆதீ என்னும் கோத்திரத்திலே, ஓர் ஏழை முஸ்லிம் குடும்பத்திலே, இஸ்மாயீல் என்பவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. இஸ்மாயீல் இறை நேசம் நிறைந்தவர். ஆண்டவன்மீது அளவுகடந்த நம்பிக்கையுள்ளவர். ஆனால், மிகமிக ஏழை. நற்குடியில் பிறந்த மங்கையை மணந்து இல்லறம் நடத்திவந்தார். அந்த இல்லறச் சோலையிலே பூத்த நான்காம் பொன்மலர் நமது ராபியா.

குழந்தை பிறந்தது. குடும்பத்தில் அது நான்காம் குழந்தை. ஆகையால், அதற்கு ராபியா (நான்காவது) என்று பெயரிடப்பட்டது. உண்ண உணவும், அணிய ஆடையும் இல்லத்திலே இல்லாத வறுமை, பிறந்த குழந்தையின் உடலை மறைத்து, அதைக் குளிரினின்றும் காப்பாற்ற வீட்டில் கந்தைத் துணியும் இல்லை. இரவில் இருளை நீக்க விளக்கும் இல்லை. குழந்தையின் தொப்புளில் தடவ எண்ணெயும் இல்லை.

வறுமை! ஆம், வறுமை நோயால் பீடிக்கப்பட்டோருக்குத்தான் அதன் துயரங்கள் தெரியும். அனுபவி

யாத மக்களுக்கு அது ஒரு வார்த்தையளவில் நின்றுவிடும். மனித வாழ்க்கைக்கு மிகமிக அவசியமான உண்வும், உடையும், உறைவிடமும் இல்லாத நிலையில் வறுமையின் கொடுமையால், பசிப்பிணியால், நிர்வாண நிலையில் பிறரிடம் சென்று உதவிகேட்கும் நிலையை அடைந்து, சுய மரியாதை என்பதை இழந்து, இழிநிலை எய்தியோருக்குத் தான் அந்த அவலநிலையை அறிய முடியும்!

அல்லாஹ்! அல்லாஹ்! வறுமையால் ஏற்படும் பொறுமைக்கும் ஓர் அளவுண்டல்லவா? வறுமை நிறைந்த வீட்டிலே குழந்தை பிறந்தது! அதன் உடலை வெப்பமாக்க, கிழிந்ததொரு கந்தையும் வீட்டிலில்லை! குழந்தை இருட்டில் கிடக்கிறது! தாயின் மனம் பொறுக்கவில்லை! தனது கணவரைப் பார்த்தாள்! வாய்திறந்தாள்!

"பக்கத்து வீட்டாரிடம் ஏதாவது வாங்கிக்கொண்டு வாருங்கள்; எண்ணெய் கிடைத்தால் விளக்கேற்றலாம்," என்றாள்.

கேட்டார் கணவர், தமது மனைவியின் துயரக் குரலை. உடனே மறுமொழியொன்றும் கூறவில்லை. ஏன்? எத்தனை கஷ்டங்கள் வந்தாலும், பிறரிடம் சென்று ஏதாயினும் கேட்பதில்லை என்று உள்ளத்தில் உறுதிகொண்டிருந்தார்; இப்பொழுது சங்கடநிலையில் அகப்பட்டுத் தவித்தார். தமது உறுதிமொழியையும் காப்பாற்றவேண்டும்! வீட்டில் மனைவியின் பரிதாபக் குரலுக்காகவும் ஏதாவது செய்தாகவேண்டும்! புறப்பட்டார்! அண்டை வீடுகளுக்குச் சென்றார்! அங்கு ஒவ்வொரு நிமிஷம் நின்றார்! திரும்பிவந்தார்!

"என் உயிர்த்துணைவியே! அண்டைவீட்டார் கதவுகளை அடைத்துவிட்டார்கள்! என்னிடம் காசு எதுவும் கிடையாது! என்ன செய்யலாம்? எல்லாவற்றிற்கும் அல்லாஹ் போதுமானவன்!" என்று மனவேதனையுடன் கூறிவிட்டு, படுக்கையில் படுத்தார்; தூங்கிவிட்டார்.

பழுத்த இறைநம்பிக்கையும், அருள் உள்ளமும் படைத்தவர்; குண நலமும் வாய்ந்தவர். அன்றிரவு அவர் ஓர் அற்புதக் கனவு கண்டார். எம்பிரான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அவரது கனவில் தோன்றினர்கள்!

"இந்தக் குழந்தையானது அல்லாஹ்வுக்குப் பிரியமான குழந்தையாகும். நீர் கவலைப்படவேண்டாம். ஈஸா ஸ்தான் என்ற பஸ்ரா கவர்னரிடம் செல்லும். அவர் தினந்தோறும் பகலில் நூறு தரூத், இரவில் நானூறு தரூத் ஓதுவது வழக்கம். ஆனல், சென்ற வெள்ளிக்கிழமை அவர் அதை மறந்துவிட்டார். எனவே, என்னுடைய தூதராக அவரிடம் செல்லுகிற உமக்கு, அவர், அதற்குப் பிரதியாக, நானூறு தீனர் நாணயம் கொடுக்கவேண்டுமென்று சொல்லும்!" என்று திருவாய்மலர்ந்தருளினர்கள்.

இரவு கழிந்தது. பொழுது புலர்ந்தது. ஏழை இஸ்மாயீல், இறை நம்பிக்கையில் உறுதியுள்ள இஸ்மாயீல், பெருமானரவர்களே அன்பு கூர்ந்து கனவில்தோன்றி உதவியளிக்கும் இஸ்மாயீல், மறுநாள் காலையில் படுக்கை விட்டெழுந்தார். பஸ்ரா அமீரிடம் சென்றார். கனவில் பெருமானரவர்கள் இட்ட கட்டளையைத் தெரிவித்தார். தூதை நிறைவேற்றினர்.

பஸ்ரா அமீர் இந்தத் தூதைக் கேட்டார். ஒவ்வொரு நாளும் தாம் ஓதும் தருதுகள் எம்பிரான் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதை அறிந்தார்! ஆனந்தமடைந்தார்! ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்! மெய்மறந்த நிலை அடைந்தார். இந்த நற்பாக்கிய நிலை இவ்வுலகில் இருக்கையிலேயே அடைந்துவிட்ட நற்செய்தி! எம்பெருமானூர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குப் பிரியமானவனாக ஆகிவிட்டேனே! என்று பெருமிதங் கொண்டார், ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்! வந்த நற்செய்திக்குச் சோபனம்! கொண்டு வந்தவருக்குச் சோபனம்!

அமீர் அகமகிழ்ந்தார்! அண்ணல் நபியின் பெயரால் அள்ளி, அள்ளி அல்லல் பட்டோருக்கெல்லாம் அளித்தார். பத்தாயிரம் திர்ஹம் வெள்ளிக் காசுகளை ஏழைகளுக்குக் கொடுத்தார். புனிதராய் வந்த தூதர் இஸ்மாயீலுக்கு நானூறு தீனூர் பொற்காசுகள் சமர்ப்பித்தார். மேலும், அவரிடம்,

"எம்பெருமானூர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களது தூதரே! உமக்கு அவசியம் நேர்ந்தபொழுதெல்லாம் என்னிடம் தாராளமாய் வரலாம், அல்லது தெரிவிக்கலாம். நான் உள்ளன்புடன் உங்களது தேவைகளைப் பூர்த்திசெய்யக் காத்திருக்கிறேன் இந்தப் பணி ஆற்றுவதில் எனது வாழ்க்கையின் உயரிய குறிக்கோள் முற்றுப்பெற்றதாகக் கருதுவேன்" என்றார்.

## அடிமை

குழந்தை ராபியா பிறந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. சில

ஆண்டுகள் கழிந்தன, குழந்தையின் தாயும் தகப்பனும் இறையடி சேர்ந்தார்கள். அருமை அன்னையையும் பக்தி நிறைந்த பிதாவையும் இழந்த இளங்குழந்தைகளின் மனம் எவ்வாறு துடித்திருக்கும்? அனாதைகளுக்கு ஆதரவு கிடைக்காமல் அவர்களது உள்ளம் எவ்வாறு பதைத்திருக்கும்! 'அம்மா! அப்பா!' என்று பெற்றோரை அழைத்து அழைத்து, நினைத்து நினைத்துக் கண்ணீர் வடித்திருக்கும். ஆனால், அந்தக் குழந்தைகளின் குரலானது காற்றுடன் கலந்து மறைந்திருக்கும். அவர்களை அழைத்து, ஆதரவளித்துப் பாதுகாப்பிடம் கொடுத்து, கவனிப்பார் அங்கு ஒருவருமிலர். தாயுடன் இருக்கவேண்டிய குழந்தைகள் தெருவில் நின்று தயங்கித் தவித்தார்கள். உயரொழுக்கமும் இறையன்பும் மிக்க பெற்றோரது பிள்ளைகள் இறக்கமற்ற உலகினில் அலைந்தார்கள். பெற்றோருடனும் உற்றாருடனும் இன்பத்திலிருந்த பிள்ளைகள் சேற்றிலும் சகதியிலும் புரண்ட வாழ்வில் தள்ளப்பட்டார்கள், பஸ்ரா நகரில் கொடும் பஞ்சம் ஏற்பட்டது. அனாதைக் குழந்தைகளைக் காப்பாற்றுவார் ஒருவருமில்லை. ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு திசையில் சென்றுவிட்டது, ராபியா என்கிற குழந்தையும் பஸ்ரா நகரை விட்டுப் புறப்பட்டது. வழியில் ஒரு மனிதன் ராபியாவைப் பிடித்தான். பிடித்து அந்த அநாதையை விற்றுவிட்டான். குழந்தை ராபியா அடிமை ராபியாவாக காலங்கழிக்கும் துர்லபமான நிலைமை ஏற்பட்டுவிட்டது!

சின்னஞ்சிறு வயதினிலே தாயினின்றும், தந்தையினின்றும், உடன் பிறந்தாரினின்றும் பிரிக்கப்பட்ட அந்தத் தனி இளங்கொழுந்தான ராபியாவின் நிலைமைதான் என்ன? மலர் பக்குவமடையு முன்னரே மொட்டில் கருகிவிட்டது! அடிமை ஆகிவிட்டால்

அடிமைத் தொழில் செய்தல்வேண்டும் அல்லும் பகலும் வேலையிலேயே ஈடுபடவேண்டும் தன்னை விலைக்கு வாங்கிய முதலாளியிடமிருந்து உள்ளன் பையோ, தாய் தந்தையரின் மெய்யன்பையோ, எதிர் பார்க்க முடியாது. பணியாள் என்றால் சிறு பிழைக்காக வும் வசைமாரி கிட்டும். கற்பனைக் குற்றங்களுக்குக் கசையடி கிடைக்கும். இளைப்பாற நேரம் கிடையாது. சில கல்நெஞ்சமுடைய முதலாளிகளுக்குத் தங்கள் பணிமக்கள் துன்பப்படுவதையும், அழுவதையும் காண் பதே இன்பக்காட்சியாகும். அன்பு என்னும் உணவை அத்தகைய புல்லர் புசிப்பதே கிடையாது. அவர் களுடைய முகம் சீற்றத்தினால் சிவந்துக் காணப்படும்! கண்களில் கனற்பொரி! உதடுகளில் துடிப்பு! அடிமை என்றால் விலங்குகளைப் போல் வாழவேண்டு மென்று விதண்டா வாதம் செய்வர். சங்கிலிகளால் பிணிக்கப் பட்டுச் சந்தையிலும் சந்தியிலும் விற்கப்பட்டோருக்கு ஓய்வு என்பதே கிடைப்ப தரிது. வேனலிலும் கானலி லும் வேலை செய்தாக வேண்டும்.

எஜமானுடைய விருப்பமே சட்டம். அவனது உள்ளப்படியே அடிமையின் வாழ்வு தாழ்வுகள் நிகழும். அன்பும் அருளும் அந்த உள்ளத்திலே நிலவமுடியாது, உண்மையும் ஒழுங்கும் அங்குக் காண்பதரிது. அடி மைக்கு உரிமைகள் கிடையாது. சலுகைகள் கிடை யாது. சமூக வாழ்வு கிடையாது. சுவாதீனம் கிடை யாது. அடிமையின் கண்களில் குப்குப் என்று கண்ணீர் ஊறும், கன்னங்களில் பாயும். உள்ளம் உடையும். ஆனால், எஜமானுக்கு இரக்கம் வராது. அவரிடம் அன் பும் அணுகாது. அவர் சான்றோரைச் சேரவும்மாட்டார். அடிமைக்கும் உள்ளம் உண்டு. உணர்ச்சி உண்டு, இன்பம் உண்டு, துன்பம் உண்டு, செயல் திறமை

உண்டு என்பதை உணரமாட்டார். சுயநலத்தைத் தமது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்வார்.

முதலாளியின் மதிவன்மைக்குத் தகுந்த முறையில் அடிமை தனது கைவன்மையைக் காட்டவேண்டும். இறைவனுடைய திருவருள் எப்பொழுதும் அரண் செய்யும் என்ற அகலாத நம்பிக்கையில் இருத்தல் வேண்டும். உமியைக் குத்தச்சொன்னாலும், அவ்வாறே செய்து, தீராத நோவையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருத்தல் வேண்டும். பயனற்ற பணியாயினும் அதைப் பணிவுடன் ஆற்றல் வேண்டும்.

அன்பின் வடிவமும் அருளின் உறைவிடமுமான ராபியா அம்மையார் ஆண்டவன் ஒருவனையே நம்பி யிருந்தார். பணிப் பெண்ணாக அமர்ந்தாலும், தமது கடமையை உணர்ந்து கடுமையான வேலைசெய்து வந்தார். எஜமானுடைய கருத்தறிந்து பணியாற்றுவார். கூரிய மதியும் சீரிய ஒழுக்கமும் நிறைந்தவர். உலகாளும் அல்லாஹ் ஒருவனையே நம்பி உள்ளம் உடையாமல் வாழ்க்கை நடத்தினார். நல்லுள்ளமும் மெய்யறிவும் உள்ளோர் நரகவேதனைகளையும் இன்பமாக மாற்றிக் கொள்வாரல்லவா? எனவே, ராபியா மிகப் பொறுமை யுடனும் திறமையுடனும் எஜமான் மனத்தை அறிந்து வேலை செய்து வந்தார்.

### அற்புதத் தீபம்—அடிமை வாழ்வில் அமர வாழ்வு

அநாதைக் குழந்தை ராபியா இவ்வாறு சிலகாலம் அடிமையாகக் காலங்கழித்தார். ஆண்டவன் வழிபாடு, அவனது திருநாமங்களை உச்சரித்தல், இறையச்சம், நள்ளிரவில் எழுந்து தனியாக உட்கார்ந்து தியானித்தல் முதலான பண்புகள் சிறு பிராயமுதலே ராபியாவிடம்

குடிகொண்டிருந்தன. அடிமையாயிருப்பினும் அடிமை வாழ்வினை அமர வாழ்க்கையாக மாற்றும் இயல்புள்ளவர். அல்லாஹ்வின் அன்பினுக்கு ஆளாவதற்காக உலக இச்சைகளைப் புறக்கணிக்கும் தன்மை வாய்ந்தவர்.

இரவில் மக்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீர் வாழ்வன, மரங்கள், செடி கொடிகள் ஆகிய எல்லாப் படைப்புகளும், நீரிலும் நிலத்திலும் இயக்கமொன்றுமில்லாமல் நிம்மதியுடன் இருக்கும். மண்ணிலும் விண்ணிலும் நிசப்தமே நிறைந்திருக்கும்.

நடு ராத்திரியிலே ராபியா எழுந்திருப்பார். பகலெல்லாம் ஓயாமல் வேலை செய்த களைப்பு. உடலிலுள்ள உறுப்புக்களிலெல்லாம் நோவு. உடல் உழைப்புள்ளோர், இரவில் நிம்மதியாக நித்திரையின் இன்பம் அனுபவிக்கும் நேரம். அவ்வேளையிலே, ராபியா எழுந்து வீட்டின் மேல் தளத்தின்மீது சென்று, தனிமையாக உட்கார்ந்து ஆண்டவனது தியானத்தில் ஈடுபடுவார்.

"என் இறைவனே! இந்த நேரமானது உன்னை அடைந்து மன்றாடிக் கேட்போருக்கெல்லாம் நீ உனது அருளை அளிக்கும் நேரம். ஆனால், நான் தன்னந்தனியாக உன்னுடன் இருக்கிறேன்." என்று உள்ளம் உருகி, கண்ணீர் வடித்து இறைவனை அஞ்சலி செய்வார். காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்கி, நாதன் நாமத்தில் ஈடுபடுவார்.

இவ்வாறு, தினந்தோறும் நடந்து வந்தது. ஆனால், வீட்டு எஜமானுக்கு இவ்விஷயம் ஒன்றுமே தெரியாது. ஓர் இரவில் எஜமான் தூக்கத்திலிருந்து நள்ளிரவில்

விழித்தார்! ராபியா எழுந்து செல்வதைக் கண்டார்! பின் தொடர்ந்தார்!

இரவின் நடுநேரம்; மையிருட்டு. எட்டுத் திக்கிலும் இருள். உலகமே தூங்கிக்கொண்டிருந்தது. உலகம் விழுங்கப்பட்டதுபோலவே இயக்கமற்றிருந்தது. அமைதியை இரவு அதிகரித்துக் கொண்டிருந்தது. காற்று சலனமற்றிருந்தது. மரங்களின் இலைகள் அசையாமல் மௌனமாக இருந்தன. ஆற்று நீர் மெல்ல மெல்ல நெகிழ்ந்து சென்றது. இது ஆறு? அல்லது நீரின் சித்திரமா? என்று பார்வை ஆச்சரியமடைந்தது. பால் குடிக்கும் குழந்தை, தாயின் மடியிலே தூங்குவதுபோன்று அலைகள் தூக்கத்தின் பைத்தியத்திலிருந்தன. பறவைகள் தங்கள் கூண்டுகளில் தூங்கிக்கொண்டிருந்தன, வானவெளியிலே நட்சத்திரங்களும் மேகத்தில் மறைந்து மந்தப் பார்வையுடன் தூங்கிக்கொண்டிருந்தன.

இரவின் தன்மையை அறியாதாருக்கு அச்சம் அதிகரிக்கும். இருட்டிலே இன்பம் காணமுடியாமல் இடர்ப்படுவர்.

ஆனால், ராபியா பஸ்ரீக்கு இறையன்பே வழிகாட்டியாகவும், மெய்யொளியாகவும் அமைந்திருந்தது. முன்னவனே முன் நின்றால், முடியாதது ஒன்று உளதோ? என்றபடி ஆறாத வேதனைகள் நிறைந்த வாழ்க்கையினை ஆராதனை வாழ்க்கையாக அந்த அம்மையார் மாற்றினார். இரவெல்லாம் தலை சாய்க்காமல் வணக்கத்தில் ஈடுபடுவார். விக்குவார், விம்முவார். தமது கண்ணீரையே காணிக்கையாகச் செலுத்துவார். தமது ஆவியை ஆண்டவனிடம் அடைக்கலமாக்குவார்.

வீட்டின் மேல்தளத்திலே ராபியா சென்று, தனிமையான இடத்தில் உட்கார்ந்து, 'அல்லாஹ்வே! நீ கொடுத்த இந்த வாழ்க்கையை எப்பொழுதும் உனது

கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடத்தவேண்டுமென்பதும், உனது வணக்கத்தில் சிறிய குறையும் ஏற்படாமலிருக்க வேண்டுமென்பதும், எனது உள்ளத்திலிருந்து பிறக்கும் பேராவல் என்பது உனக்குத் தெரிந்ததே. நான் இப்பொழுது உன்னால் படைக்கப்பட்ட ஒரு மனிதனுடைய அடிமையாக இருக்கிறேன். ஆகையால்தான், உனது திருச்சமூகத்திற்கு வரத் தாமதமாகிவிடுகிறது. என் இறைவா! எனக்கு வேறொன்றும் வேண்டாம். உன்னுடைய இன்பம் (ரிலா) ஒன்றையே நாடுகிறேன். நீ என்னை எந்த நிலைமையில் வைப்பாயோ அதற்கு முழுமனத்துடன் தலைசாய்த்து நடப்பேன்" என்று பணிவுடன் இறைவனிடம் வேண்டுகோள் விடுத்தார்.

எஜமான் இந்தக் காட்சியைக் கண்டார்! "கள்ளங்கபடில்லாத இந்தப் புனிதவதியை நான் இதுவரை அறிந்து கொள்ளமுடியவில்லையே" என்று மனம் நொந்தார்.

அச்சமயம், இன்னொரு காட்சியையும் அந்த எஜமான் கண்டார்! இருண்ட இரவிலே, ராபியா அம்மையாரின் தலைக்குமேல் திடீரென்று ஓர் அற்புதத் தீபம் தோன்றி ஒளிவீசிக்கொண்டிருந்தது! "ஆத்மீக உயர்வுபெற்ற இந்தப் பரிசுத்தமான பெண்ணை நான் இன்றுவரை ஒரு சாதாரண அடிமையாக மதித்தேனே! இந்தப் புண்ணியவதிக்கு மரியாதைசெய்யத் தவறிவிட்டேனே! பணிப்பெண் என்றல்லவோ இதுவரை நான் நினைத்தேன்! மாந்தர்க்கு இறைநெறி கற்பிக்கும் மாதை நான் மதிக்கத் தவறிவிட்டேனே" என்றெல்லாம் மனம் நொந்தார்.

உடனே, அந்த அம்மையாருக்குத் தெரியாமல், மெல்ல மெல்ல நடந்து வந்து தமது படுக்கையில் படுத்துக் கொண்டார். மறுநாள் காலையில் எழுந்தார்; ராபியாவை அழைத்தார்.

"அம்மையே! நான் நேற்றுவரை உம்மை அறிய வில்லை. இரவில் நீர் இறைவணக்கம் செய்து, அல்லாஹ் விடம் மன்ருடிப் பிரார்த்தனை புரிவதை என் கண்ணுரக் கண்டேன். என் மனம் மாறிவிட்டது. உம்மைப்போன்ற உயர்மாதரை பணிமகளாக வைத்துக்கொள்ளல் ஆகாத காரியமாகும். நான் உம்மை விடுதலை செய்துவிட்டேன்! இனி, உங்கள் பிரியப்படி எங்கு வேண்டுமாஞலும் செல்ல லாம். ஆனால், ஒரு வேண்டுகோள். நீங்கள் எங்கள் வீட்டி லேயே தங்கினுல், அது எங்களுக்குப் பெரும் பாக்கியமா கும். மேலும், நாங்கள் உங்களுக்குப் பணிவிடை செய்யும் வாய்ப்பும் கிடைக்கும்," என்று கேட்டுக்கொண்டார்.

ஆனல், ராபியா பஸ்ரீ அப்பால் அந்த வீட்டில் தங்க வில்லை. வீட்டாரிடம் விடைபெற்றுக்கொண்டு, புறப்பட் டார். வழிச் செலவுக்கும் கொடுத்து. அந்த வீட்டார் மரியா தையுடன் அவரை அனுப்பினுர்கள்.

விடுதலை கிடைத்த பிறகு, ராபியா பஸ்ரீ அருகிருந்த ஹஸ்ரத் காஜா ஹஸன் பஸ்ரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி யவர்களுடைய தோழமையிலும் பணியிலும் காலங் கழித்தார்.

### பக்தி மார்க்கத்திலே

ஆண்டவனது மெய்யடியார்கள் பக்திமார்க்கத்திலே, தங்கள் உடலையும் உள்ளத்தையும் பயிற்சி செய்வதில், இறையின்பம் பெறுவதில் எத்தனையோ துன்பங்களுக்கு ஆளானுர்கள். பலர் அரசாங்கங்களைத் துறந்தார்கள். பலர் பிறந்த நாட்டையும், மொழியையும், இனத்தையும் விட்டு வெகு தூரம் சென்ருர்கள். சிலர் காடுகளிலும் வஞ்ந்தரங்களிலும் வசித்தார்கள். ஞாஞசிரியர்களைத்தேடி தேசாதேசம் சென்ருர்கள். ஞாஞசிரியர்களது பணிவிடை யில் பல்லாண்டு கழித்தார்கள். கடல் கடந்தார்கள். மலை ஏறினுர்கள். பாலைகளில் நடந்தார்கள். இரவெல்லாம் கண்மூடாமல் வணக்கம் புரிந்தார்கள்.

ராபியா பஸ்ரீயுடைய ஆரம்ப ஆத்மீக வாழ்க்கையும் இவ்வாறே கழிந்ததாகத் தெரிகிறது. அந்த அம்மையார் ஒவ்வொருநாளும் ஆயிரம் ரக்அத் நபில் தொழுகை தொழுவார். பகலில் நோன்பு வைப்பார். இரவெல்லாம் தொழுவார். சிலசமயம், ஒரு வார காலம்வரை தொடர்ச்சியாகத் தண்ணீரால் நோன்பு திறந்து ஒன்றும் சாப்பிடாமல் இருந்துவிடுவார். சுருங்கக் கூறு மிடத்து, அல்லாஹ்வின் பாதையிலே, இறைநேச நெறி யிலே, ஆண்டவனுடைய அன்பையும் அருளையும் பெறும் முயற்சியிலே பற்பல கஷ்டங்களை மேற் கொண்டார்.

இந்த நிலைமையில் ராபியா பஸ்ரீ அடிக்கடி கண்ணீர் வடித்துக்கொண்டும், பெருமூச்சு விட்டுக்கொண்டும், ஆண்டவனிடம் அடிக்கடி மன்ருடி மன்ருடிப் பிரார்த்தித் துக்கொண்டுமிருப்பர்.

இதைக்கண்ட ஒரு மனிதன், "அம்மா! உங்கள் உடல் நன்ருயிருக்கிறதே! வியாதி இருப்பதாகத் தெரிய வில்லையே! அவ்வாறிருக்க, நீங்கள் ஏன் கண்ணீர் வடிக் கிறீர்கள்? ஏன் பெருமூச்சு விடுகிறீர்கள்?" என்று கேட்டான்.

அதற்கு ராபியா பஸ்ரீ, "என் அகநிலை (பாதின்) சம்பந்தமாக உனக்கென்ன தெரியும்? மருத்துவர்களால் சுகமாக்கமுடியாத அகநோய் என்னைப் பற்றிக்கொண் டிருக்கிறது. இதன் மருந்து என்னுடைய மெய்யான நேசனுன அல்லாஹ்விடமே இருக்கிறது. அதனுல்தான், நான் அவனிடம் அந்த வியாதியைப் போக்கும்படி மன்ருடிக் கேட்கிறேன்" என்று மறுமொழி கூறினுர்.

## கை முறிந்தது!

ஒருநாள் ராபியா அம்மாள் தெருவில் நடந்து கொண்டிருக்கையில் ஓர் ஆடவன் திடீரென்று எதிரில் வந்தான். அவனைக்கண்டு அம்மையார் அவசரம் அவசரமாக ஓடி ஒதுங்கினர். அச்சமயம், அவர் கீழே விழுந்து விட்டார்! கை முறிந்துவிட்டது!

அந்த நிலைமையில் ராபியா பஸ்ரீ தமது தலையைத் தரையில் வைத்து ஸஜ்தா (சாஷ்டாங்கம்) செய்து,

"ஆண்டவா! நான் ஓர் ஏழை, ஓர் அனாதை, ஆனால்—ஆனால், இந்த அவல நிலையிலும்—இதைவிட அதிகக் கஷ்டங்கள் வந்தாலும் நான் மனங்கலங்கமாட்டேன். துக்கப்படமாட்டேன். உன்னிடம் முறையீடு செய்யமாட்டேன். நான் வேண்டுவதெல்லாம் ஒன்றே ஒன்று. அதுதான் உனது அன்பு, உனது (ரிலா) அருட்பொருத்தம்" என்றார்—உடனே வானத்திலிருந்து,

"துக்கப்படவேண்டாம்! நாளை கியாமத் நாளையிலே வானவரும் உம்மைக்கண்டு பொறாமை கொள்ளும்படியான அவ்வளவு உயர்வு உமக்குக் கிடைக்கும்" என்ற ஓர் அசரீரி வாக்குப் பிறந்தது.

இதைக் கேட்டு, அம்மையார் ஆனந்தங்கொண்டு வீட்டிற்குத் திரும்பினர்.

## ஹஜ் செல்லல்

ஆயுளிலே ஹஜ் செய்வதற்கு வசதியில்லாத எத்தனை கோடி முஸ்லீம்கள் தவிப்பதை நாம் கண்டும் கேட்டுமிருக்கின்றோம். சிலருக்கு ஒன்றல்ல, பல ஹஜ்கள் செய்யும் பாக்கியம் கிடைத்துவிடுகிறது. ஆனால், உலகில் முதன்முதலாக ஒரே தெய்வ வணக்கத்திற்காக மக்கா

நகரிலே நிறுவப்பெற்ற கஅபா என்னும் புனித ஸ்தலத்திற்கு, தற்காலத்தைப் போன்ற போக்குவரத்து வசதிகள் இல்லாத அக்காலத்திலே, செல்வதென்ருல் மிகவும் மேலான பெருமையென்றே கொள்ளவேண்டும். ஆரம்ப இஸ்லாமிய சரித்திர காலத்திலே, நாயக தோழர்களும், இமாம்களும், அவ்லியாக்களும் இக்கடமையை உள்ளன்புடன் பூர்த்தி செய்தார்கள். அதனுல், அவர்கள் பெருமையும் அடைந்தார்கள். தனது பெயருடன் "அல்ஹாஜ்," "அல்ஹஜ்ஜா," "கச்சியம்மா," "காசியார்" என்று சேர்த்துக் கொள்ளும் பெருமைக்காக அவர்கள் ஹஜ்ஜு செய்யவில்லை. இறைவனுடைய வீட்டைத் தேடிச்சென்று ஹஜ்ஜை முடித்துக்கொண்டு, மதீனு சென்று ஆங்காங்குள்ள இஸ்லாமிய சரித்திர சம்பந்தமான இடங்களைக் கண்டு, ஆன்மீக சக்திபெற்று காய்ச்சிய பாலைப்போல், மக்கள் சேவையில் இன்னும் அதிகமாக ஈடுபட்டார்கள். அரைத்த சந்தனம் போல் அவர்களது இஸ்லாமிய வாழ்க்கையின் மணம் அதிகரித்தது. சுட்ட சங்குபோன்று அவர்களது உள்ளமும் புகழ்பெற்றுப் பிரகாசமடைந்தது. ஹஜ்ஜிலிருந்து புதிய மனிதராய், புனித மனிதராய், புண்ணிய சீலராய், போற்றற்கு உரியராய், பெரும் பண்புகளுக்கெல்லாம் முன் மாதிரியாய், எம்பிரான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களது புனித வாழ்க்கையின் பிரதிபிம்பங்களாய் மாறினுர்கள்.

ஹஸ்ரத் ராபியா பஸ்ரீயும் எத்தனையோ ஹஜ் செய்தார்.

### அம்மையாரை கஅபா வரவேற்றது

அம்மையார் முதலாம் ஹஜ்ஜுக்குச் செல்லும் பொழுது, மக்கா நகரின் பக்கத்தில் வந்துவிட்டார்.

அங்கு நின்ருர். கண்களிலிருந்து மாலைமாலையாகக் கண்ணீர் வடிய,

“அல்லாஹ்வே! என் உள்ளம் உடைந்து, துக்கத்தால் நிரம்பி நிற்கின்றது. ‘நான் எங்குச் செல்கிறேன்?’ என்று என்னை நான் அடிக்கடி கேள்வி கேட்கின்றேன். ஏனென்ருல், நான் மண்ணுல் படைக்கப்பட்ட ஒரு பதுமை. கஅபா என்பது கல்லால் கட்டப்பட்டது. நானே உன்னையே காணும் காதலில் இருக்கிறேன்” என்று மனங்கசிந்து தமது எண்ணத்தை வெளியிட்டார்.

உடனே அசரீரி பிறந்தது:

“ராபியாவே! உனக்கு மூஸாவின் சரித்திரம் ஞாபகமில்லையா? தூர் மலையின்மீது அல்லாஹ்வின் ஒளியின் சாதாரணமானதொரு சாயல் பட்டது. உடனே மலை தூள்தூளாகிவிட்டது. நீ என்னை இந்த புறக்கண்களால் பார்க்க விரும்புவதை விட்டுவிடு.”

ஹஸ்ரத் ராபியா இரண்டாவதாக ஹஜ்ஜுக்குச் சென்ருர். மக்காவுக்குச் சமீபத்தில் வந்துவிட்டார்! ஆனல், ஆச்சரியத்துடன் நின்றுவிட்டார்! அந்த அம்மையாரை வரவேற்க, கஅபா கட்டடமே, இடம் பெயர்ந்து அவரை நோக்கி வந்துகொண்டிருந்தது!

ஹஸ்ரத் ராபியா பஸ்ரீ, அந்த கஅபாவைப் பார்த்து,

“நான் இந்த கஅபாவை வைத்துக்கொண்டு என்ன செய்வேன்? இந்த கஅபாவின் ஆண்டவனே எனக்கு வேண்டும்! நான் கஅபாவைப் பார்த்தவுடன் எனக்கு ஆனந்தம் ஏற்பட்டுவிடாது. என்னுடைய மெய்யான

இறைவனுடைய ஜமால் என்னும் அழகால் மட்டுமே நான் பரமானந்தமடைவேன்" என்ருர்.

## ஸுல்தான் இப்ராஹீம் பின் அத்ஹம் (ரஹ்)

அச்சமயம் ஸுல்தான் இப்ராஹீம் பின் அத்ஹம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி, ஆண்டவன் பக்தி மார்க்கத்திலே தமது அரசையும் துறந்துவிட்டு, பதினன்கு ஆண்டுகளாக, மக்காவை நோக்கி நடந்து, ஒவ்வொரு அடியெடுத்துவைத்து, இரண்டு ரக்அத்நபில் தொழுகை தொழுதுகொண்டு, இறுதியாக மக்கா நகரில் நுழைந்தார். ஆனல், அங்கு கஅபாவைக் காணவில்லை! ஆச்சரியம்! ஒருக்கால் தமது கண் பார்வையில் ஏதேனும் பிழை இருக்கலாம் என்றும் நினைத்தார். உடனே,

"உமது பார்வையில் பிழையொன்றுமில்லை, ஆனல், இங்கு வந்துகொண்டிருக்கும் என்னுடைய அன்பினுக்குரியவளை அழைத்துவர கஅபா சென்றிருக்கிறது," என்று ஆகாயவாணி பிறந்தது.

இந்தச் செய்தியைக் கேட்டு ஹஸ்ரத் இப்ராஹீம் பின் அத்ஹம் திகைத்துவிட்டார்! இறைவனுடைய விசேஷ அன்பினுக்கு அருகதையுள்ள அந்த அம்மையாரைத் தாமும் காணவேண்டுமென்று புறப்பட்டார்.

நடந்து கொஞ்ச தூரம் சென்ருர்! எதிரிலே ஒரு காட்சி! உடலெல்லாம் மெலிந்து வாடிய ஓர் அம்மையார் இறைகாதல் என்னும் போதையில் தள்ளாடிக்கொண்டு வருவதைக் கண்டார். அந்த அம்மையாருக்கு விண்ணிலும் மண்ணிலும் ஆசையே கிடையாது. வானகமும் வையகமும் அவரிடம் வெகுமதியாகக் கொடுத்தாலும் அந்த அம்மையார் அவற்றை வேண்டாமென்று நிராக

21.3
NGI

ரிப்பவர். நரகத்தையும் சுவர்க்கத்தையும் வேண்டாதவர். இறையின்பம் ஒன்றையே விரும்புகிறவர். அல்லாஹ்வின் அன்பே அவருக்கு வேண்டப்படுவது. ஆண்டவனது ஜமால் என்னும் பேரழகே அவர் பார்த்து ஆனந்திக்க இச்சிப்பது. அல்லாஹ் அல்லாத எந்த வஸ்துவிலும் அவருக்கு இன்பத் தொடர்பு இல்லாதிருந்தது!

வந்துகொண்டிருந்த ஹஸ்ரத் ராபியாவை, ஹஸ்ரத் இப்ராஹீம் பின் அத்ஹம் கண்டார். அம்மையாரை நோக்கி,

"ராபியா அம்மையாரே! இதென்ன நீங்கள் உலகில் இத்தகைய விளம்பரஞ் செய்துகொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு ஹஸ்ரத் ராபியா பஸ்ரீ, "கஅபத்துல்லாஹ்வுக்கு எத்தனையோ ஆண்டுகள் நடந்து, வரும் வழியிலே ஒவ்வொரு அடி எடுத்து வைத்து இரண்டு ரக்அத் நபில் தொழுகை தொழுவதாக நீங்கள் உலகில் பெரிய முரசு கொட்டி விட்டீர்களே!"

"நீங்கள் உங்கள் பிரயாணத்தைத் தொழுகையின் வலிமையால் கடந்து வந்தீர்கள். நான் தாழ்மையுடனும், வேண்டுதலுடனும், பிரார்த்தனையுடனும், எனது உயிரினுக்கினிய இறைவனுடைய தரிசனத்திற்காக வந்திருக்கிறேன்" என்று மறுமொழி கூறினர்.

நவ நாகரிகப் பித்துக்கொண்ட, ஆத்மீக சக்தி இன்னது என்பதை அறியாத, இறைநேசம் என்ற தேனைப் பருகி அனுபவிக்காத சிலருக்கு கஅபா இடம் பெயர்ந்து வந்து ஹஸ்ரத் ராபியாவை எதிர்கொண்டழைத்தது என்பது நம்பிக்கைக்கும் புறம்பானதாகத் தோன்றலாம்.

கூடுமானல் பகுத்தறிவால் இறைவனையும் பகுத்து விடுவர், இந்தப் புதுமைப்பித்தர். இதர மதங்களைவிட இஸ்லாமில் பகுத்தறிவுக்கு நிரம்ப இடம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனல், மஸ்னவீ ஷரீபில் மவ்லானு ரூமி ரஹமத்துல்லாஹி அலைஹி கூறுவதுபோல, மனிதனுடைய பகுத்தறிவு ஓர் எல்லை வரையில்தான் அவனுக்கு உதவும். அப்பால், ஆத்மீக வளர்ச்சி பெற்றவுடன் பகுத்தறிவுக்கெட்டாத பேறுகள் கைகூடும். அதற்கப்பால், ஆண்டவனுடைய அன்பும் அருளும் தான் நமக்குத் துணைசெய்யும். கரும்பின் உருசி அதை மென்று தின்ருல்தான் தெரியும். ஆத்மார்த்த விஷயங்கள் வெறும் வாய் விளக்கத்தாலும் எழுத்தாலும் கற்பித்துவிட முடியாது. அனுபவ ரீதியில் உள்ளத் தூய்மையுடன், இறை நெறியில் நின்று, கஷ்டப்பட்டு அடையவேண்டிய பேறு அது. இறைவன் எல்லாம் வல்லவன். அவனை நாடினுல் எல்லாம் நடக்கும். குன் பயகூன், இறைவன் "ஆய் விடு" என்ருல் உடனே உண்டாகிவிடும். அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்ற உண்மையை அனுபவித்து உணர்ந்தோர் இதை நம்பாமல் முடியாது. ஓர் எல்லைக்குட்பட்ட, மனிதனுடைய பகுத்தறிவு இதை அறிந்துகொள்ள முடியாது. ஆத்மீகத் துறையில் முன்னேறிச் செல்லாதோருடைய பகுத்தறிவும் இதை அறிந்துகொள்ள முடியாது.

குர்ஆனில் "ஸிப்கத்துல்லாஹி ஸிப்கா" ஆண்டவனுடைய வண்ணத்திலே (நீயும்) வண்ணமாகக் கலந்து விடு—என்று கூறப்பட்டிருக்கிறது. மேலும், திருமறையில் இறைவனுடைய தொண்ணூற்றென்பது லட்சணங்கள் கூறப்படுகின்றன. பக்தர்கள் தினந் தோறும் தனிமையாக உட்கார்ந்துகொண்டு அந்த

லட்சணங்களை நாவால் கூறி, அத்தகைய குணங்கள் தமக்கும் வரும்படி பிரார்த்திப்பார்கள். இரும்பானது நெருப்பில் இடப்பட்டவுடன் நெருப்பின் தன்மை அடைவது போன்று, மிருக குணமுடைய மனிதன், தெய்வீகக் குணங்களைப் பெறுகிறான். அத்தன்மை யடையுங்காலையில் அவன் இறைவனுடைய ஆளாகி, சாதாரண மக்கள் செய்யமுடியாத வேலைகளையெல்லாம் செய்து முடிப்பான், தனது உடல், பொருள், ஆவி, எல்லாவற்றையும் இறைவன்பால் சரணடைந்து விட்டோர்களே இறைநேசச் செல்வர். அவர்களுக்காக இறையன்பு எப்பொழுதும் எதையும் செய்யும். இறைவனுடைய பயம் எவரிடம் உண்மையாக இருக்கிறதோ அவரைக்கண்டு அந்த இறைவனுடைய படைப்புகள் எல்லாம் பயப்படும். அவனது பணியைச் செய்யக் காத்திருக்கும் இத்தகைய உன்னத ஆன்மீக நிலை அடைந்தோருக்கு வானவரும் பணியாற்றுவர்.

இத்தகைய ஆத்மீக சிகரமடைந்த மக்களது செயல்களெல்லாம் சாதாரண மக்களால் செய்யப்படுவன அல்ல. அவர்களது செயல்கள் தனிச்சிறப்புடையன.

“வ மா யஷாவூன இல்லா அன் யஷாவூன ரப்புல் ஆலமீன்” — அவர்கள் எதையும் விரும்பவில்லை. உலகங்களுக்கெல்லாம் கர்த்தாவான ஆண்டவன் விரும்புவதையே அவர்கள் விரும்புகிறார்கள்—குர்ஆன்.

இத்தகைய மகான்கள், மெஞ்ஞானிகள், அவ்லியாக்கள், ஸூபிகள் தாங்களாக ஒன்றையும் விரும்பமாட்டார்கள். அவர்களுடைய ‘சொந்த விருப்பம்’ என்பதே கிடையாது. ஆண்டவனிடமிருந்து உதிப்பதே அவர்களது விருப்பமாகும்.

இன்றைய நவ நாகரிக வாலிபர்கள் பெயரளவில் இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றுகிருர்கள். அவர்களது சொற்களில் உள்ளத் தூய்மை இல்லே. உள்ளும் புறமும் வேறுபட்டிருக்கின்றன. பிறருக்காக வாழ்க்கை நடத்தும் பெருங்குணம் இல்லே. சுயமரியாதையின் இரகசியத்தை இளேஞர் இன்னும் அறியவில்லே. ஹஸ்ரத் பிலால், ஹஸ்ரத் உவேஸ் கரனீ, ஹஸ்ரத் ஸல்மான் பார்ஸீ போன்ற நாயக தோழர்களின் உண்மையான இஸ்லாமியப்பற்று இன்றைய வாலிபரிடம் காணப்படவில்லே. உண்மைக்காக, ஆண்டவனுக்காக மக்கள் சேவைக்காக, உடல், பொருள், ஆவி இம் மூன்றையும் அர்ப்பணஞ்செய்யும் ஆவல் இல்லே. இறைவனுக்குப் பயப்படாமல், மரணத்திற்கே பயப்படுகிருர்கள். உடல் நலம் என்னும் மதுவை உண்டு மயங்கிக்கிடக்கிருர்கள். தங்களது நித்திய வாழ்க்கையில் குர்ஆன் உடைய மேலான கட்டளேகளேயும், பெருமானுர் (ஸல்) அவ்ர்களது சொல்லேயும் செயலேயும் புறக்கணித்துவிட்டார்கள். இறைவனே மறந்து இஸ்லாமிய சகோதரத்துவத்தை விட்டுவிட்டார்கள். பேச்சிலும் விதண்டாவாதத்திலும் உச்சநிலே அடைந்துவிட்டார்கள். ஆனுல், நற்கருமங்கள் செய்வதில் பின்னடைகிருர்கள். இஸ்லாமிய கட்டளேகளே மறந்ததோடு அவற்றின் மேன்மையைப்பற்றியும் சந்தேகங் கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். இந்த நவநாகரிக மோகத்தில் அவர்கள் இஸ்லாமிலிருந்து விலகி வெகு தூரம் சென்றுவிட்டார்கள். இந்த உலக வாழ்க்கைக்கு முன் மாதிரியாக இருக்கவேண்டும் என்பதையும் இறைவனுடைய பிரதிநிதியாக இருந்து உலகினேப் பிரகாசிக்கச் செய்யவேண்டும் என்பதையும் தவ்ஹீதின் மெய்யொளியைப் பரப்பவேண்டும் என்பதையும் மறந்துவிட்டார்கள். எம்பெருமானுர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலேஹிவ

ஸல்லமவர்களிடம் மெய்யான விசுவாசத்துடன் நாம் இருப்போமானல்—எல்லாம் வல்ல அல்லாஹ்வின் சர்வ வல்லமையும் (லவ்ஹுூம் கலமும்) நம்முடையதே—என் பதை மறந்துவிட்டார்கள். ஹஜ்ரத் ராபியா பஸ்ரீயைப் போன்ற இஸ்லாமியப் பெருமக்களது வாழ்க்கை வரலாறு கள் இத்தகைய வாலிபரைத் தூக்கத்தினின்றும் தட்டி எழுப்பாதா !

இந்தச் சந்தர்ப்பத்திலே, எம்பெருமானர் மதீன வுக்குச் சென்ற ஓராண்டிலே சுமார் இருநூற்றைம்பது மைலுக்கப்பால் மதீனவில் வசித்த முஸ்லீம்களை முதல் முதலாவது பத்ர் என்னுமிடத்தில் மக்காவாசிகள் தாக்கிய சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. பத்ர் போரில் பெருமானர் ஸல்லல்லாஹுூ அலைஹிவஸல்ல மவர்களும், முந்நூற்றுப் பதின்மூன்று முஸ்லிம்களும், ஆயுதந்தரித்து வந்த ஆயிரம் மக்கா வாசிகளின் எதிர்ப் புக்கு ஆளானர்கள். இதைப்போலவே, உஹுத் போரில் எழுநூறு முஸ்லிம்களை மூவாயிரம் மக்கா வாசிகள் வந்தெதிர்த்தார்கள். அகழ்போரில், ஆயிரம் முஸ்லிம் களை இருபத்துநாலாயிரம் மக்கா வாசிகள் தங்கள் நேசகோத்திரங்களுடன் எதிர்த்தார்கள்.

நிற்க, பத்ர் போரிலே, முஸ்லீம்கள் தாக்குண்டு தோல்வியடைந்து விடுவார்களென்று தோன்றியது. அச்சமயம், எம்பெருமானர் ஸல்லல்லாஹுூ அலைஹி வஸல்லமவர்கள் சில பொடிக்கற்களை எதிரிகளின் திசையில் எறிந்தார்கள்! அதன் பலஞக எதிரிகள் திகிலடைந்துவிட்டார்கள்! இறுதியில் தோல்வியடைந் தார்கள்! சில பொடிக்கற்கள் பலம் பொருந்திய ராணுவத்தை எவ்வாறு தோல்வியடையும்படி செய்தன ?

உண்மையில் இது இறைவன் கட்டளைப்படி நடந்த தாகும்.

குர்ஆனிலே, "பொடிக்கற்களை எறியவில்லை, ஆனால் அவற்றை அல்லாஹ்வே எறிந்தான்" என்று கூறப்பட்டிருப்பதை ஆராய்ந்தறிக.

எனவே, ஹஸ்ரத் ராபியா பஸ்ரீயை எதிர்கொண்டழைக்க வெளித் தோற்றத்திலோ, ஆத்மீக முறையிலோ க்அபா சென்றது, ஆண்டவனுடைய சர்வவல்லமையிற் சேர்ந்த செயலாகும். ஞானக்கண் கொண்டு பார்ப்போருக்கு இதில் அதிசயம் ஒன்றுமில்லை.

## விவாஹம் வேண்டாமை

ஹஸ்ரத் ராபியா பஸ்ரீ தமது காலத்தை ஆண்டவனுக்காக அர்ப்பணித்துவிட்டார். குடும்ப வாழ்க்கையில் இச்சையில்லாதிருந்தது. இதை அறியாத ஒருவர் அந்த அம்மையாரிடம் வந்து தம்மை மணஞ் செய்துகொள்ளும்படி கேட்டுக்கொண்டார். அதற்கு ராபியா பஸ்ரீ,

"உலகினை விரும்புவோன் ஆணும் பெண்ணுமல்லாத அலி ஆவான். மறு உலகில் சுவர்க்கத்தை விரும்புவோன் பெண்ணாவான். ஆண்டவனையே விரும்புவோன் ஆணாவான். என்னை விரும்பி வந்த நீர் உலகினை விரும்புவோரானால், நீர் அலி, நான் பெண். அலியுடன் விவாகஞ் செய்துக்கொள்ளல் முடியாதகாரியமாகும். இனி, நீர் மறு உலகை விரும்புவோராயின் நீரும் பெண் நானும் பெண். பெண்ணுடன் பெண்ணுக்கு எவ்வாறு விவாகமாகமுடியும்? நீர் இறைவனையே விரும்புவீராயின் நீரும் ஆண். தெய்வீகக் காதலிலே இருந்து, அல்லாஹ்வை மட்டுமே விரும்புகின்றேனாதலின் நானும்

ஆண். ஆடவனை ஆடவன் எவ்வாறு கல்யாணம் செய்ய முடியும்?” என்ருர். வந்த மனிதர் இதற்கு மறுமொழி யொன்றும் கூறமுடியாமல், நாணமுற்று வந்த வழியே திரும்பிவிட்டார்.

## நன்றி மறந்த பாவி

ஒருநாள் அம்மையாரிடம் ஒரு மனிதன் வந்தான். அவன் நெற்றியைச் சுற்றி ஒரு துணி கட்டியிருந்தான்.

ஹஸ்ரத் ராபியா:—எதற்காக இந்தத் துணியைக் கட்டியிருக்கிருய்?

மனிதன் :—தலைவலி அதிகமாயிருக்கிறது. அதற்காகக் கட்டியிருக்கிறேன்.

ஹ. ராபியா :—உனது வயதென்ன?

மனிதன் :— முப்பது.

ஹ. ராபியா :—இந்த முப்பது ஆண்டுகளில் எப்பொழுதாயினும் தலைவலி வந்ததுண்டா?

மனிதன் : இல்லை.

ஹ. ராபியா :—இந்த முப்பது ஆண்டுகளாக உன்னை சுகமாக வைத்திருந்த ஆண்டவனுக்கு நன்றியாக துணியைக் கட்டவில்லையல்லவா? இன்று ஒரு நாள் தலைவலி வந்தவுடன் ஆண்டவனிடம் உனக்குள்ள அதிருப்தியை முறையிட்டு உடனே ஒரு துணியைக் கட்டிக்கொண்டாயே. இவ்வாறு நன்றி மறப்பது நன்றன்று. நமக்கு எத்தகைய துன்பம் வந்தாலும் நாம் அதைப் பொறுமையுடன் சகித்துக்கொண்டு, அதுவரை நமக்கு உதவிசெய்த

அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதில் தவரக்கூடாது. அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்துகொண்டே இருத்தல் வேண்டும். இதை இஸ்லாமிய பரிபாஷையில் ஷுக்ர் செய்தல் என்கிறோம். பெரும்பாலான மக்கள் இறைவனுக்கு நன்றி செலுத்தாமலிருப்பதோடு, சிறு சங்கடம் வந்தவுடன் ஆண்டவனைப்பற்றிக் குறைகூற ஆரம்பித்து விடுகிறார்கள். அக்கம்பக்கத்திலுள்ளோர், உறவு முறையார், நண்பர்கள் முதலியோரிடம் சென்று தங்கள் கஷ்டநஷ்டங்களைப்பற்றி விளம்பரஞ் செய்கிறார்கள்.

ஆனால், இறைநேசம் மிகுந்தோர், வேறு விதமாய் நடப்பார்கள். அதாவது, தங்கள் வீட்டில் கஷ்டம் வராவிட்டால், தங்கள் குடும்பத்தில் வியாதி வராவிட்டால் "ஆண்டவன் இந்தஆண்டில் நம்மை மறந்துவிட்டானே!" என்று கண்ணீர் வடிப்பார்களாம். ஏனென்றால், நோயும், துன்பமும் வந்த காலையிலே மனிதன் ஆண்டவனை நோக்கி உதவி தேடுகிறான், பிரார்த்திக்கின்றான், மன்றாடிக் கேட்கிறான். உடல் நலமுள்ள, திருப்திகொண்ட நிலைமையில் சாதாரண மக்கள் இறைவனை மறந்துவிடுகிறார்கள். எனவே, நமக்குத் துன்பம் வந்தால் ஆண்டவனைத் தொடர்ந்து நினைக்கும்படி வாய்ப்புக் கிடைக்கின்றது. அந்தத் தொடர்பால் நமது ஆத்மீக வாழ்க்கை உயர்வடையும் என்பது உறுதி.

## இறைவன் ஒருவனே போதுமானவன்

ஹஸ்ரத் ராபியாவின் புனித வாழ்க்கையாலும், நல்லுபதேசங்களாலும் பல மக்கள் தங்கள் வாழ்க்கையை சீரிய முறையில் திருத்தியமைத்துப் பாவச்செயல்களை விட்டு, இறை நெறியிலே ஈடுபட்டார்கள். அவர்களில் ஏழைகள் பலர் எனினும், சில சீமான்களும் இருந்தார்கள்.

எனவே, அந்தச் சீமான்கள் ஹஸ்ரத் ராபியாவுக்கு அவ்வப்பொழுது தங்களாலான உதவி செய்து அந்த அம்மையாரின் உலக வாழ்க்கையில் தேவையொன்றுமின்றி நடத்த முன்வந்தார்கள். இவ்வாறு, தமக்கு உள்ளன்புடன் உதவி செய்யும் நோக்கத்துடன் பல தனவான்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதும் அந்த அம்மையாருக்குத் தெரியும். எனினும், அதைப் பொருட்படுத்தாமல் பிறருடைய உதவியை எதிர்பாராமல், உலக இச்சைகளை உதறித் தள்ளிவிட்டு அம்மையார் வாழ்க்கை நடத்தி வந்தார்.

ஒருசமயம் ஹஸ்ரத் ராபியா கிழிந்துபோன பழைய துணியை உடுத்திக்கொண்டிருந்தார். அங்குக் கூடியிருந்த மக்களில் ஒருவர்,

"எனக்கு அனுமதி கொடுத்தால், நான் புதிய ஆடையொன்றை வாங்கிக்கொண்டுவந்து கொடுப்பேன்," என்றார். அதைக்கேட்டு அந்த அம்மையார்,

"எந்த நிலைமையிலும் நம்மிடமிருக்கும் சிறு பொருளே போதும் என்ற மனத்துடனும், பொறுமையுடனும் வாழ்க்கை நடத்தலே மேன்மையாகும்" என்று மறுமொழி கூறினார்.

## தோழி மரியம் பஸ்ரீ

ஹஸ்ரத் ராபியா பஸ்ரீ உடைய தோழமையில் பல பெண்மணிகளும் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் மரியம் பஸ்ரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹா என்பவராவர். ஞான மார்க்கத்தில் வெகுதூரம் சென்றவர். இவருக்கும் ஹஸ்ரத் ராபியாவுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. இறைநேசம் என்ற இன்பக் கடலில் இந்த அம்மையார் எப்பொழுதும் இருப்பார். பிறருடன் அதிகமாகப் பேச மாட்டார்.

இந்த அம்மையார் ஒருநாள் குர்ஆன் ஓதிக்கொண் டிருக்கையில் "வ பிஸ்ஸமாயி ரிஸ்ககும் வ மா' கவ் அதூன் — "உங்கள் உணவு (ரிஸ்க்) வானத்திலே (இறைவனிடம்) இருக்கிறது. மேலும், உங்களுக்கு வாக்களிக்கப்பட்டதும்" (குர்ஆன்.) என்ற இறை வசனம் வந்தது. அதன் பொருளை உணர்ந்து ஆண்டவனைப் புகழ்ந்து இன்று முதல் உணவைத் தேடி ஓர் அடியும் எடுத்து வைக்கமாட்டேன் என்று உறுதி கொண்டார். அன்று முதல் தமது காலத்தையெல்லாம் இறை வணக் கத்தில் செலவு செய்தார். பகலெல்லாம் நோன்பு வைப் பார். எவராயினும் ஏதாவது கொடுத்தால் அதைக் கொண்டு நோன்பு திறப்பார். இந்த அம்மையார் ஒரு நாள் இறைநேசர் கூட்டத்தில் உட்கார்ந்திருந்தார். அங்கு இறைநேசக் கவிகள் பாடப்பட்டன. மரியம் அம்மையார் அவற்றைக் கேட்டார். ஆனந்தக் கடலில் மூழ்கினார்! மெய்மறந்தார்! இறை நேசத்தில் ஆவி துறந்தார்!

## நான் அல்லாஹ்வின் அடிமை

ஹஸ்ரத் ஹஸன் பஸ்ரீ ரலியல்லாஹு அன்ஹு என்னும் பெரியாரே ஹஸ்ரத் ராபியா பஸ்ரீயின் ஞானா சிரியர். அப் பெரியார் ஒரு நாள் அந்த அம்மையாரை நோக்கி, "நீர் விவாகம் செய்து கொள்ளல் நன்று" என்று கூறினார். அதற்கு அம்மையார்,

"தனக்கென ஒரு தனி ஜீவனும், தனி வாழ்க்கை யும் வைத்திருப்போருக்கு விவாகம் வேண்டும். ஆனால், நானோ என்மீது ஆதிக்கமில்லாதவள். என் பிரியப்படி நான் ஒன்றும் செய்ய முடியாது. நான் அல்லாஹ்வின் அடிமை, என்னைப்பற்றி ஏதாவது கேட்கவேண்டுமானால் எனது எஜமானனை அல்லாஹ்விடமே கேட்பீர்களாக!" என்று கூறிவிட்டார்கள்.

## ஒன்றுக்குப் பத்தாக இறைவன் கொடுப்பான்

ஒருநாள் அம்மையாரது வீட்டிற்கு ஒன்பது விருந்தாளிகள் வந்துவிட்டார்கள். தாங்கள் பசியாக இருப்பதாகவும் ஹலாலான உணவு புசிக்க அங்கு வந்ததாகவும் கூறினார்கள். ஆனால், அவர்கள் எல்லோருக்கும் விருந்து செய்யப் போதுமான ஆகாராதிகள் அப்போது அந்த அம்மையாரிடம் இல்லை. அன்று வீட்டில் இரண்டே ரொட்டிகள் இருந்தன. அந்தச் சங்கடமான நிலைமையில் ஒரு பிச்சைக்காரன் வந்து பிச்சை கேட்டான். உடனே வீட்டிலிருந்த இரண்டு ரொட்டிகளையும் பிச்சைக்காரனுக்குக் கொடுத்துவிட்டார்! இருந்த இரண்டு ரொட்டிகளும் போய்விட்டன! விருந்தாளிகளுக்கு சாப்பாடு கிடையாது. கொஞ்ச நேரத்தில் ஒரு சீமாட்டியின் வேலைக்காரி அங்கு வந்து தனது எஜமாட்டி அன்பளிப்பாகக் கொடுத்ததாகப் பதினெட்டு ரொட்டிகள் சமர்ப்பித்தாள். அவற்றை எண்ணிப் பார்த்து,

“உன் எஜமாட்டி இவற்றை எனக்காக அனுப்பவில்லை என்று தெரிகிறது,” என்று அனுப்பிவிட்டார். சில நிமிஷங்களில் அந்தப் பணிப்பெண் மறுபடியும் வந்தாள். ஆனால், இருபது ரொட்டிகள் கொண்டு வந்தாள். ஹஸ்ரத் ராபியா பஸ்ரீ உடனே அவற்றை ஏற்றுக்கொண்டார்.

விருந்தாளிகள் இச்சம்பவங்களைக் கண்டு ஆச்சரியமடைந்தார்கள். இதன் இரகசியத்தை விளக்கவேண்டுமென்று அம்மையாரைப் பணிவுடன் கேட்டுக்கொண்டார்கள். அம்மையார் கூறலுற்றார்:

“ஒன்றுக்குப் பத்து கொடுப்பேன்!” என்று ஆண்டவன், வாக்களித்திருக்கிறான். அந்த வாக்கில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு; எனவே, பிச்சைக்காரனுக்கு

நான் இரண்டு ரொட்டிகளை ஆண்டவன் பாதையிலே கொடுத்துவிட்டேன். ஏனென்றால், இந்த இரண்டு ரொட்டிகள் விருந்தாளிகளாகிய உங்கள் அனைவருக்கும் போதாமலிருந்தன. ஆண்டவன் வாக்கு பொய்யாகாது. அதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு. எனவேதான், அந்தப் பணிமகள் முதலில் கொண்டுவந்த பதினெட்டு ரொட்டிகளைத் திருப்பிவிட்டேன். ஏனெனில், ஆண்டவன் வாக்குப்பிரகாரம் எனக்குச் சேரவேண்டியது இருபது ரொட்டிகள். கடைசியாக, அந்த இருபது ரொட்டிகளையும் ஆண்டவன் அனுப்பினான். அவற்றை ஏற்றுக் கொண்டேன்" என்றுகூறி வந்தவர்களுக்கு உணவளித்து அனுப்பினர்.

## இறைவன் பயமும், பக்தியும்

அம்மையாரின் வீட்டிலே எத்தனையோ நாட்கள் ஆகாராதிகள் இல்லாமல் போய்விடும். ஆனல், அவர் அதைப்பற்றிக் கவலைப்படமாட்டார். பசியுடன் இருந்து பொறுமையைக் கடைப்பிடித்து காலங்கழித்து வருவார். ஒருசமயம் தொடர்ச்சியாக சில நாட்கள் வரை சமையல் செய்யவே இல்லை. ஒருநாள் ஏதோ கிடைத்தது. பணிப்பெண் சமையலை ஆரம்பித்தாள். கறி சமைப்பதற்கு சிறிது வெங்காயம் தேவையாயிருந்தது. "பக்கத்து வீட்டில் வாங்கிக்கொண்டு வருகிறேன்; அனுமதி கொடுங்கள்" என்றாள் பணிப்பெண். அதைக்கேட்டவுடன் அம்மையார்,

"பிறரிடம் எதுவும் கேட்பதில்லை என்று நான் உறுதி செய்திருக்கிறேன். இல்லை! ஆண்டவனிடமும் அவனது பிரியமில்லாமல்—நான் கேட்கமாட்டேன்" என்றார். அச்சமயம் அங்கு ஒரு பறவை வந்தது. அதன் வாயில் வெங்காயம் இருந்தது. அது அந்த வெங்கா

யத்தைப் போட்டுவிட்டுச் சென்றது. ஆனல், அதை ராபியா பஸ்ரீ எடுக்கவில்லை. "நான் ஷைத்தானுடைய வலையில் சிக்கமாட்டேன்!' என்றுகூறி ரொட்டி மட்டும் தின்று திருப்தி கொண்டார்.

## அவனல்லாதவற்றை நினைப்பதேது?

ஒருநாள் ஒருவர் அம்மையாரிடம் வந்து, "நீங்கள் ஷைத்தானைப் பகைத்திருக்கிறீர்களா?" என்று கேட்டார். அந்தக் கேள்விக்கு விடையாக அவர்,

"எவருடனும் நேசங்கொள்ளவோ, எவரையேனும் பகைக்கவோ எனக்கு ஒய்வு எங்கிருக்கிறது? அல்லாஹ்
காதலிலிருந்து எனக்கு விடுதலை ஏது?" என்று கூறினர்.

## இறைநேசச் செல்வர் நால்வர்

ஒருநாள் ஹஸ்ரத் ராபியா பஸ்ரீயிடம் மூன்று இறைநேசச் செல்வர்கள் வந்தார்கள். அவர்களில் அந்த அம்மையாரின் ஞாஞசிரியரான ஹஸ்ரத் ஹஸன் பஸ்ரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி ஒருவர். மற்ஞெருவர் ஹஸ்ரத் ஷபீக் பல்கீ (Shafeeq Balkhee) ரஹ்மதுல் லாஹி அலைஹி என்பவர். மூன்ருவது ஹஸ்ரத் மாலிக் தீனர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி என்னும் பெரியார். ஆகவே, நால்வரும் ஓரிடத்தில் உட்கார்ந்து இறைநேசம், உண்மை (முஹப்பத்...ஸதாகத்) என்பனவற்றைப் பேச ஆரம்பித்தார்கள்.

ஹஸன் பஸ்ரீ :—தனது துன்பகாலத்தில் பொறுமையில்லாதவன் இறைநேசமுள்ளவனென்று தாவாசெய்து உரிமை கொண்டாடல் உண்மையல்ல.

ஷபீக் பல்கீ :—கஷ்ட காலத்தில் இறைவனுக்கு (ஷுக்ர்) நன்றி செலுத்தாதவன் இறைநேசப்பாதையில் செல்ல அருகதை இல்லாதவன்.

மாலிக்தீனார் :—நேசனால் கொடுக்கப்பட்ட துன்பத் திலே இன்பத்தைக் காணாதவன் " நான் இறைநேசன் " என்று தாவா செய்தல் சரியல்ல.

மூவரும் இறைநேசத்தைப்பற்றி மூன்று வகையில் விளக்கஞ் செய்தார்கள். ஹஸ்ரத் ராபியா பஸ்ரீ,

" நேசனுடைய முஷாஹிதாஹ் என்ற மெய்யொளி யின் தரிசனத்தில் தனது துன்பத்தை மறக்காதவன் இறைநேசன் என்று சொல்லத் தகாதவன் " என்றார். இவ்வாறு நால்வரும் இறைநேசத்தின் நான்கு வகை களை வகுத்து விளக்கினார்கள்.

உண்மையாக இறைவனை நேசிப்பவன், தான் நேசிக்கும் இறைவனுடைய பிரியத்திற்கு எதிராக எண்ணுவதுமில்லை; தனது மேலான குறிக்கோளின் நேர்பாதையை விட்டு, விலகிவிடவும் மாட்டான்.

ஹஸ்ரத் பாயஜீத் புஸ்தாமி ரஹ்மத்துல்லாஹி ஓர் இரவு முழுவதும் இஷா தொழுகை நேரத்திலிருந்து மறு நாட்காலைத் தொழுகை நேரம் வரை நின்றுகொண்டே ஆண்டவனுடைய வணக்கத்தில் ஈடுபட்டிருந்தார். அப் பொழுது இறைவனை நோக்கி,

" இறைவனே, உன்னுடைய மெய்யடியார்களில் சில ருக்கு நீரில் நடக்கவும், ஆகாயத்தில் பறக்கவும் அருள் செய்தாய்! ஆனால், நான் அதை விரும்பவில்லை. ஒரு கூட் டத்தாருக்கு பூமியின் பொக்கிஷங்களைக் கொடுத்தாய். சிலருக்கு ஒரே இரவில் பல்லாயிரம் மைல் கடந்துவிடும் சக்தி அளித்தாய்! ஆனால், நான் அவற்றை விரும்ப வில்லை," என்று கூறிவிட்டுப் பின்பக்கம் திரும்பிப் பார்த் தார். அங்கு, எஹ்யா பின் மனாதிர் (ரஹ்மத்துல்லாஹி) என்னும் பெரியார் நிற்பதைக் கண்டார். அவரிடம்,

"எஹ்யா! உம்மிடம் சொல்லத் தகுந்த விஷயத்தை நான் கூறுகிறேன், கேளும்; அல்லாஹு தஆலா என்னை, மலகூத் அஃலாவிலும், அர்ஷ், குரஸி, வானலோகங்களிலும் கொண்டு சென்ருன். இவற்றில் உனக்கு வேண்டியதைக் கேள். நான் கொடுக்கிறேன்!" என்ருன்.

"இவற்றில் ஒன்றும் எனக்குத் தேவையில்லை!" என்றேன்.

"உண்மைதான், நீ என்னுடைய சொந்த அடியான்" என்று அல்லாஹ் திருவுளமானுன்.

எனவே அல்லாஹ்வின் படைப்புக்கள் எத்தகைய உயர்வு பெற்றிருந்தாலும் அவற்றை ஆண்டவனுடைய மெய்யடியார்கள் விரும்ப மாட்டார்கள். நரகமும், சுவர்க்கமும் ஆண்டவன் படைத்தவைதானே! ஏன் அவற்றை வெறுக்கவும் விரும்பவும்வேண்டும்? அல்லாஹ் அல்லாத எதையும் அல்லாஹ்வின் உண்மை நேசர்கள் விரும்ப மாட்டார்கள். அத்தகைய மெய்யடியார்களுக்கு வேண்டியதெல்லாம் அவர்களுடைய இறைவன் ஒருவனே. "இய்யாக்க நஅபுது-(இறைவா) உன்னையே நாங்கள் வணங்குகிருேம். வ-இய்யாக்க நஸ்த ஈன்-உன்னிடமே நாங்கள் உதவி தேடுகிருேம்" என்பார்கள். அவ்வாறே அவர்களது வாழ்க்கையின் ஒவ்வொரு விநாடியிலும் செயலளவில் செய்து காட்டுவார்கள்.

## இறைவன் பாதையில்

ஒருநாள் ஹஸ்ரத் ராபியா பஸ்ரீயிடம் ஒருவர் வந்து சில கேள்விகள் கேட்டார்.

ஒருவர் :—நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள்?

ஹ. ராபியா :—ஆலமுல் அர்வாஹ் என்ற ஆத்ம உலகிலிருந்து.

ஒருவர் :—எங்கு போவீர்கள்?

ஹ. ராபியா :—எங்கிருந்து வந்தேனே அங்கு.

ஒருவர் :—இந்த உலகில் என்ன செய்கிறீர்கள் ?

ஹ. ராபியா :—துக்கத்தில் இருக்கிறேன். ஆஹ்! உலகம் எனது துக்கத்திற்கான இடமாகும். உலகில் சந்தோஷம் இல்லையென்று தினந்தோறும் அனுபவத்தில் தெரியவில்லையா? ஓர் ஏழையும், பட்டினியாக இருப்பவனுமே தமது துக்கத்தில் ஆழ்ந்திருக்கிருர்கள். எனினும், அரசனுடைய அரண்மனையிலும் சுகமும் திருப்தியும் கிடையாது. ஏழைக்கு வறுமையைப்பற்றிய கவலை. அதைப்போலவே பேரரசருக்கு நாட்டைப்பற்றிய கவலை. விட்டிலுக்கு விளக்குவேண்டுமென்ற துடிதுடிப்பு. புல்புல் பறவைக்கு வசந்தகாலம் எப்பொழுது வந்திடுமோ, வாசமலர்கள் எப்பொழுது பூத்திடுமோ என்ற கவலை. உலக பாசமுள்ளோரது உள்ளத்தில் ஆசையின் நெருப்பு எரிந்துகொண்டிருக்கிறது. இறைநேசருக்குத் தங்களது மெய்யான பூர்வ இடத்திலிருந்து பிரிந்துவிட்டோமே என்ற துக்கம் உண்டாகிறது. அல்லாஹ்வின் பாதையிலே தங்களை இழந்துவிட்டவர்களே பாக்கியவான்கள். அவர்களது துக்கமானது நித்தியானந்தத்தை அடையும் வழிகாட்டியாகும். இத்தகைய புனித மக்களுக்கு இவ்வுலகிலும் மறு உலகிலும் மங்களம்.

அலா இன்ன அவ்லியர் அல்லாஹி லா கவ்புன் அலைஹிம் வலாஹும் யஹ்ஸனூன். அறிந்துகொள்ளுங்கள் : நிச்சயமாகவே, அல்லாஹ்வுடைய (அவ்லியா) நண்பர்கள் மீது அச்சமில்லை. மேலும், அவர்கள் துயரம் அடையவும் மாட்டார்கள்.

இன்னல்லதீன ஆமனூ வ கானூ யத்தகூன லஹுமுல் புஷ்ரா பில் ஹயாதித் துன்யா வா பில் ஆகிரா. லா தப்தீல லிகலிமாதில்லாஹி வ தாலிக ஹுவல் பவ்ஸுல் அலீம் = விசுவாசிகளுக்கும், பக்திமான்களுக்கும், இகலோக பரலோக வாழ்க்கையில் நற்செய்தி உண்டு. அல்லாஹ்வுடைய வசனங்களில்

மாற்றம் கிடையாது. (அவர்களுக்கு) இது மேலான சித்தியாகும்.—குர்ஆன்—பச்சாத்தாபம்—10 : 63, 64.

## திருடன் குருடன்

ஒருநாள் ஹஸ்ரத் ராபியா தொழுதுகொண்டிருந்தார். அப்பொழுது பலவீனமாயிருந்தார். அதனால், படுத்துத் தூங்கிவிட்டார். ஒரு திருடன் வீட்டில் நுழைந்தான். அவருடைய போர்வையைத் திருடிக்கொண்டு சென்றான். ஆனால், கதவின் பக்கம் சென்றான். சென்றவுடன் அவனுக்குக் கண் தெரியவில்லை. போர்வையைக் கீழே வைத்தான். மறுபடியும் பார்வை பெற்றான். கதவைப் பார்த்தான். மறுபடியும் போர்வையை எடுத்துக்கொண்டு வெளியே சென்றான். ஆனால், கதவின்பக்கத்தில் வந்தவுடன் மறுபடியும் பார்வை இழந்தான். இவ்வாறு பல தடவை முயற்சித்தான். இறுதியில்,

"நீ துன்பத்திற்கு ஆளாகாதே! இந்த வீட்டுக்காரி சில ஆண்டுகளாக இறைநேசத்தில் இருக்கிறாள். ஆகையால் ஆண்டவனுடைய மேற்பார்வையில் இருக்கிறாள். இங்கு ஷைத்தான் வரமுடியாது. அப்படியானால், உன்னால் என்ன செய்யமுடியும்? ஒரு சிநேகிதன் தூங்கினால் என்ன? மற்றொரு சிநேகிதன் விழித்திருக்கிறான்" என்று சப்தம் வந்தது.

## இம்மையைப் போன்ற மறுமை

ஒருநாள் சிலர் ஹஸ்ரத் ராபியாவிடம் வந்தார்கள். "கியாமத்து நாளையிலே ஒரு நிமிஷ நேரமாயினும் ஆண்டவனுடைய (தீதார்) தரிசனம் எனக்குக் கிடைக்காவிட்டால் சுவர்க்கத்திலுள்ளோர் என்மீது இரக்கப்படும்படி அவ்வளவு அளவு கடந்து அழுவேன்—என்று ஹஸ்ரத் ஹஸன் பஸ்ரீ (ரஹ்) சொல்லுகிறார்கள்" என்று வந்தவர்கள் கூறினார்கள்.

இதைக்கேட்டு ஹஸ்ரத் ராபியா,

"இது உண்மையான வார்த்தைதான். ஆனால், உலகிலும் இறைவனை மறந்திருப்பதற்காக இவ்வாறு அழுது, அதனால் உலக மக்களுக்கு இரக்கம் வந்தால் கியாமத்திலும் அவ்வாறே நடக்கும். ஆனால், அவ்வாறு உலகில் நடக்கவில்லையானால், கியாமத்திலும் அவ்வாறு நடக்காது," என்று விளக்கஞ் செய்தார்.

## இறைநேசம்

ஒருநாள் சிலர் அம்மையாரிடம் வந்து,

"நீங்கள் எவனுடைய வணக்கத்தில் ஈடுபட்டிருக்கிறீர்களோ, அவனைப் பார்க்கிறீர்களா?" என்று கேட்டார்கள்.

அவர்களுக்கு மறுமொழியாக,

"நான் அவனைப் பார்க்கவில்லையானால் எவ்வாறு வணக்கஞ் செய்வேன்?" என்று அம்மையார் கூறினர்.

அம்மையார் எப்பொழும் அழுதுகொண்டிருப்பதைப் பார்த்து, "ஏன் இவ்வாறு அழுதுகொண்டிருக்கிறீர்கள்?" என்று சிலர் விசாரிக்க, அவர்களிடம் அம்மையார் கூறியதாவது:

"நான் இறைவனை நேசிக்கிறேன். நான் இறக்கும் சமயத்திலே, "நீ எனக்குப் பொருத்தமானவள்ல்ல" என்று சப்தம் வரக்கூடாதென்று பயந்து அழுகிறேன்."

மேலும் கூறினர்:

"தனது கண்களின் மூலமாய் மனிதன் ஆண்டவனை அடையமுடியாது. நாவின் மூலமாகவும் வழி கிடைக்காது. காதோ கேட்பதைத்தவிர வேறொன்றும் செய்ய முடியாது. கை கால்களும் உதவிசெய்ய முடியாது. எல்லாம் மனத்தைச் சேர்ந்ததே. தூங்காமலிருக்க முயற்சி செய்யுங்கள். மனம் விழிப்படைந்துவிட்டால்

அப்பால், அதற்கு நேசனுடைய அவசியமில்லை. ஏனென்ருல், விழிப்புள்ள மனம்-ஹக்கில்-ஆண்டவனில் மறைந்துவிடுகிறது. அவனில் மறைந்துவிடுவோருக்கு நேசனுடைய ஆவலின் அவசியமென்ன? இதுவே, பனு பில்லாஹ் (Fana Fillah)-ஆண்டவனில் அழிந்துவிடுதல்-என்ற நிலையாகும்."

இன்னும் கூறினர்:

"நவால் தவ்பா (குறை இரங்கல்) செய்தல் பொய்யர்களின் வேலையாகும். உள்ளத்தால் தவ்பா செய்தால் இரண்டாம் தவ்பாவின் அவசியமே இல்லை."

### வன விலங்குகளின் அன்பு

ஒரு சமயம் ஹஸ்ரத் ராபியா பஸ்ரீ ஒரு மலைக்குச் சென்ருர். அங்குள்ள மான் முதலான காட்டு மிருகங்கள் அம்மையாரைச் சுற்றி நின்றுகொண்டிருந்தன. இதற்கிடையில் ஹஸ்ரத் ஹஸன் பஸ்ரீ அங்கு வந்தார். அவரைக் கண்டவுடன் அந்த மிருகங்கள் ஓடிவிட்டன. இதைக் கண்டு ஹஸ்ரத் ஹஸன் பஸ்ரீ ஆச்சரியப்பட்டு, இதற்குக் காரணம் என்னவென்று அம்மையாரிடம் கேட்டார்.

ஹஸ்ரத் ராபியா:—நீங்கள் இன்று என்ன சாப்பிட்டீர்கள்!

ஹஸ்ரத் ஹஸன் பஸ்ரீ:—மான் கொழுப்பு.

ஹ. ராபியா:—நீங்கள் அவற்றின் கொழுப்பைச் சாப்பிட்டீர்கள். ஆகையால், அவை உங்களை விட்டு ஓடிப்போகின்றன.

எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின்
தெய்வ வருட்கருணை செய்வாய் பராபரமே.

எவ்வுயிருந் தன்னுயிர்போ லெண்ணுந் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தெந்நாளோ.

## உண்மையான வேலை

ஒருநாள் அம்மையார் பராத் (யுப்ராதீஸ்) நதிக் கரையிலே உட்கார்ந்திருந்தார். அங்கு ஹஸ்ரத் ஹஸன் பஸ்ரீயும் வந்து சேர்ந்தார். வந்து ஆற்றுத் தண்ணீரில் முஸல்லா (தொழுகை விரிப்பு) விரித்து, அம்மையாரை நோக்கி, "வாருங்கள்! இங்கு இரண்டு ரக்அத் தொழுகை தொழுங்கள்!" என்றார். ஆனால், அம்மையார் தமது முஸல்லாவை ஆகாயத்தில் விரித்து, ஹஸன் பஸ்ரீயை நோக்கி, "வாருங்கள்! மக்களுக்கு மறைவான இந்த இடத்தில் இரண்டு ரக்அத் தொழுதுகொள்ளுங்கள்" என்றார்.

மேலும், கூறினர்:

"நீங்கள் செய்த வேலையை ஒரு சிறுமீன் செய்யக் கூடும். நான் செய்த வேலையை அற்பமான ஓர் ஈ செய்யக்கூடும். ஆனால், உண்மையான அசல் வேலை இந்த இரண்டு வேலைகளுக்கும் புறம்பானது."

## விரலில் விளக்கொளி!

ஓர் இரவில் ஹஸ்ரத் ஹஸன் பஸ்ரீ சில நண்பர் களுடன், அம்மையாரின் இருப்பிடத்திற்குச் சென்றார். ஆனால், அங்கு இருட்டாக இருந்தது. அச் சமயம் அம்மையார் தமது விரலில் ஊதினர். உடனே, விரலில் பிரகாசம் உண்டாகிவிட்டது. மறுநாட் காலை வரையில் விளக்கிற்குப் பதிலாக அந்த விரல் சுடர் கொடுத்துக் கொண்டிருந்தது.

## மெழுகு, ஊசி, உரோமம்

ஒருசமயம் மெழுகு, ஊசி, உரோமம் இம்மூன்றை யும் ஹஸ்ரத் ஹஸன் பஸ்ரீக்கு அம்மையார் அனுப் பினர்.

"மெழுகைப்போல் உலகைப் பிரகாசிக்கச் செய்யுங்கள்! நீங்கள் எரிந்து, மற்ருருக்குப் பிரகாசத்தைக் கொடுங்கள். ஊசியைப்போல் நீங்கள் நிர்வாணமாயிருந்து பிறருக்கு ஆடை உடுத்துங்கள். எப்பொழுதும் வேலை செய்யுங்கள். இந்த வேலை செய்த பிறகு உங்கள் வேலை கெட்டுவிடாதபடி உரோமத்தைப்போல் மெல்லினமாகி விடுங்கள்" என்று செய்தி விடுத்தார்.

## கம்பளி வெள்ளையா? கருப்பா?

அம்மையார் ஒரு சமயம் ஒரு கம்பளி வாங்கிக் கொண்டு வரும்படி ஒருவரிடம் நான்கு திர்ஹம் (நாணயம்) கொடுத்தார்.

அந்த மனிதர், "அம்மா! உங்களுக்கு வெள்ளைக் கம்பளி வேண்டுமா? அல்லது கறுப்புக்கம்பளி வேண்டுமா?" என்று விசாரித்தார். இதைக்கேட்டவுடன், அம்மையார், "நான் கொடுத்த பணத்தை என்னிடமே கொடுத்துவிடும்" என்று பணத்தை வாங்கி, அதை தஜ்லா நதியில் வீசிவிட்டார். மேலும்,

"கம்பளி இன்னும் வாங்கவில்லை. அதற்குள் வெள்ளையா? கறுப்பா? என்ற பிரச்சினை கிளம்பி விட்டதே!" என்ருர்.

## வசந்தகாலக் காட்சிகள்

வசந்த காலத்தில், வாசமலர்கள் பூத்திருந்தன. குயிலினங்கள் பாடிக்கொண்டிருந்தன. ஆகாயமெல்லாம் இனிமையான தோற்றம். இயற்கையின் வனப்பைக் கண்டு இளவல்களெல்லாம் அகமகிழுங்காலம்.

அப்பொழுது அம்மையார் தமது அறையிலே தனிமையாய் உட்கார்ந்து இறைவணக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அம்மையாரின் பணிமகள் அவரை நோக்கி,

"அம்மா! வெளியே வாருங்கள்! இயற்கையின் வனப்பைக் கண்டு களிப்படையுங்கள்! இன்பம் நுகருங்கள்!" என்று கூறி அழைத்தாள்.

அதற்கு அம்மையார்,

"நீ உள்ளே வா! படைப்புக்களின் அழகைப் பார்க்க நீ என்னை அழைக்கிறாய்! அவற்றைப் படைப்போனைப் பார்க்க நீ இங்கே வா! என் வேலை சிருஷ்டிகளைப் பார்ப்பதல்ல, சிருஷ்டி கர்த்தாவைப் பார்ப்பதிலேயே எனக்குப் பரமானந்தம் உண்டாகிறது" என்றார்.

## கடுஞ்சோதனை

ஒருசமயம் அம்மையார் தொடர்ச்சியாக ஏழுநாட்கள் நோன்பு வைத்து, நோன்பு திறக்காமலும் தூங்காமலும் இருந்தார். ஏழாம்நாள் பசியின்கொடுமை அதிகரித்து விட்டது. அப்பொழுது ஒருவர் வந்து சாப்பாடு கொடுத்து விட்டுச் சென்றார். அம்மையார் அந்த ஆகாரத்தை வாங்கி வைத்துவிட்டு விளக்கேற்றினார். அதற்குள் ஒரு பூனை வந்து சாப்பாட்டைக் கவிழ்த்துவிட்டுச் சென்றது! எனவே, நோன்பு திறப்பதற்கு வேறு வஸ்து இல்லாமல், தண்ணீர்க் கூஜாவை எடுத்துவரலாமென்று எண்ணினார். தண்ணீர் கொண்டு வந்தார். அதற்குள் விளக்கு அணைந்துவிட்டது! தண்ணீர் குடிக்க முயன்றார். ஆனால், கூஜா கீழே விழுந்து உடைந்துவிட்டது!

இந்த நிலைமையில், அம்மையார், துயரமடைந்து, "ஆண்டவனே! இதென்ன இரகசியம்!" என்றார்.

உடனே, "ராபியாவே! உலகிலுள்ள பெரும்பேறுகள் அனைத்தையும் உனக்கு நான் கொடுத்துவிட வேண்டுமென்று விரும்புகிறாயா? அப்படியானால், உன் உள்ளத்திலிருந்து என்னைப்பற்றிய துக்கத்தைத் திரும்

பப் பெற்றுக்கொள்வேன். ஏனென்றால், ஒரே உள்ளத்திலே உலகப்பேறுகளும் என்னுடைய துக்கமும் இருப்பது அசாத்தியம். ராபியாவே! உனக்கு ஓர் ஆசை இருக்கிறது. எனக்கும் ஓர் ஆசை இருக்கிறது. இரண்டு ஆசைகளும் ஒரே இடத்தில் இருக்க முடியாது" என்று அசரீரி வாக்கு உண்டாயிற்று.

கேட்டார் அம்மையார். உடனே,

"ஆண்டவனே! உன்னை விட்டுப் பிறர் என்னை விலக்காதிருக்கும்படி உன் நினைவிலேயே என்னைச் செலுத்திவிடு!" என்று பிரார்த்தித்தார். மேலும், மக்களிடமிருந்து விலகி வசிக்க ஆரம்பித்தார். ஒவ்வொரு தொழுகை நேரத்திலும், "இதுதான் என்னுடைய இறுதித் தொழுகை!" என்று நினைப்பார்.

## இறைவணக்கத்தின் நோக்கமென்ன?

சில ஞானிகள் ஒருநாள் ஹஸ்ரத் ராபியாவிடம் வந்தார்கள். வந்தவர்களும் அம்மையாரும் ஒரு பிரச்சினையில் ஈடுபட்டார்கள்.

ஹஸ்ரத் ராபியா :— (அவர்களில் ஒருவரை நோக்கி) நீங்கள் எதற்காக அல்லாஹ்வை வணங்குகிறீர்கள்?

முதலாம் பெரியார் :—நரகத்தில் ஏழு பாகங்களையும் கடந்து செல்லல் மிகமிக அசாத்தியமானதல்லவா? ஆகையால், நரகத்தின் பயத்தால் நான் ஆண்டவனை வணங்குகிறேன்.

ஹஸ்ரத் ராபியா:—(இரண்டாம் மனிதரைப் பார்த்து) நீங்கள் எக்காரணத்தினால் இறைவனை வணங்குகிறீர்கள்?

இரண்டாம் பெரியார் :—சுவர்க்கத்தின் ஆசையால் நான் இறைவனை வணங்குகிறேன்.

ஹஸ்ரத் ராபியா:— நரக வேதனையின் அச்சத்தினாலோ, சுவன லோகத்தில் இன்பம் அனுபவிக்கும் ஆசையினாலோ அல்லாஹ்வை வணங்குகிற அடியான் வெகு கீழான அடியானாவான்.

எல்லோரும் :—(அம்மையாரிடம்) அப்படியானால் நீங்கள் எதற்காக வணக்கஞ் செய்கிறீர்கள் ? ஆண்டவனிடத்திலே உங்களுக்கு ஆசையோ, நன்னம்பிக்கையோ இல்லையா ?

ஹஸ்ரத் ராபியா :—முதலில் வீட்டுக்காரனைத் தேட வேண்டும். அதற்கப்பால் வீட்டைத் தேடவேண்டும். நரகமோ, சுவர்க்கமோ இருப்பதும் இல்லாததும் எனக்கு ஒன்றே. தன்னை வணங்குமாறு ஆண்டவன் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறான் என்பதே போதுமானது. நரகமும், சுவர்க்கமும் படைக்கப்படாவிட்டால் அவனுடைய வணக்கம் இல்லாமற்போகுமா ?

மேற்கண்ட சம்பாஷணையிலிருந்து இறைவனையே நாம் ஒரு மனப்பட்டு வணங்கவேண்டுமென்றும் வணக்கத்தால் ஏற்படும் இலாபத்தையும், நஷ்டத்தையும் எதிர் நோக்கல் அவ்வளவு முக்கியமானதல்லவென்றும் தெள்ளிதில் விளங்குகின்றது. இய்யாக்க நஃபுது—(உன் அடியாராகிய நாங்கள்) உன்னையே வணங்குகிறோம்—என்று குர்ஆன் முதல் அத்தியாயத்தில் கூறப்பட்டு ஒவ்வொரு முஸ்லிம் ஆணும் பெண்ணும் ஐங்காலப் பிரார்த்தனையில் பல தடவை இதை ஓதுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## அம்மையாரைச் சோதனை செய்தல்

ஹஸ்ரத் ராபியாவைச் சோதனை செய்யும் நோக்கத்துடன் சிலர் அவரிடம் வந்தார்கள். வந்து, ஆண்டவன் எல்லா மேன்மைகளையும் ஆண் பாலாருக்கே

அருளியிருக்கிருன். இதைப் போலவே அற்புதங்கள் செய்யும் சக்தியும் ஆண் மக்களுக்கே கொடுத்து விட்டான். இதுவரை, எந்தப் பெண்ணுயினும் நபியாக வந்ததுண்டா? அப்படியிருக்க, நீங்கள் ஏன் இவ்வாறு கஷ்டப்படுகிறீர்கள் ?" என்று கேட்டார்கள்.

அவர்களுக்கு விடையளிக்கையில், அம்மையார்,

" நீங்கள் சொல்வதெல்லாம் உண்மைதான். ஆயினும் தற்பெருமையும்—" அனு ரப்புகுமுல் அஃலா—நானே (மக்களாகிய) உங்களுக்கு ஆண்டவன் "—(இது ஹஸ்ரத் மூஸா (அலை) காலத்திலே பிர்அவ்ன் அரசர் கூறியது) என்பதும் ஆண் மக்களுடைய வேலையே. இதுவரை பெண் மக்கள் (ஆணும் பெண்ணுமல்லாத) அலியாகத் தோன்றவில்லை. ஆனல், ஆண்களே அலியாகத் தோன்றியிருக்கிருர்கள் " என்று கூறி அவர்களுக்கு வெட்கம் உண்டாகும்படி செய்தார்.

## தேவைகளை இறைவனே பூர்த்தியாக்குவான்

அம்மையார் நோயுற்றிருந்தார். ஹஸ்ரத் ஹஸன் பஸ்ரீ, அம்மையாரைப் பார்க்க வந்தார். அச்சமயம் அங்கு ஒரு பணக்காரனும் வந்து நின்றுகொண்டிருந்தான். அவன் அழுதுகொண்டிருந்தான். ஹஸ்ரத் ஹஸன் பஸ்ரீயைக் கண்டவுடன்,

" அம்மையாருக்காக நான் ஒரு சாமான் கொண்டு வந்திருக்கிறேன். அம்மையார் அதை மறுத்துவிடுவாரோ என்று பயந்து அழுகிறேன். தயவுசெய்து நீங்கள் எனக்காக அவரிடம் சொல்லுங்கள். அதை ஏற்றுக்கொள்ளும்படி சிபாரிசு செய்யுங்கள்," என்று மன்ருடிக் கேட்டுக்கொண்டான்.

ஹஸ்ரத் ஹஸன் பஸ்ரீ, அம்மையாரிடம் சென்று உடல் நலத்தைப்பற்றி விசாரித்து விட்டு, பணக்காரன் விருப்பத்தைத் தெரிவித்தார். அதற்கு அம்மையார்,

"இறைவனையே மகா மேலானவன் என்று கருது வோருடைய அன்னபானதிகளை அவன் நிறுத்திவிட மாட்டான். இறைவனுடைய நேசத்தின் சுவாசத்திலே எவரது வாழ்க்கை செலவிடப்படுகிறதோ அவர்களை ஆகாராதிகள் இல்லாமலே அல்லாஹ் ஜீவிக்கச் செய் கிறான். இந்த உண்மையை நான் அறிந்துகொண்ட நாளிலிருந்து உலகத்தாரின் உபகாரத்தினின்றும் என் முகத்தைத் திருப்பிக்கொண்டேன்."

"இந்த மனிதனுடைய பொருள் ஹலாலோ ஹராமோ என்று தெரியாத நிலைமையில் அதை எவ் வாறு நான் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை நீங்களே கூறுங்கள்" என்றார்.

## பேரீச்சம்பழத்தில் ஆசை

ஒருநாள் ஹஸ்ரத் ஸுப்யான் தவ்ரியும், அப்துல் வாஹித் ஸூபியும் அம்மையாரைப் பார்க்க வந்தார்கள். அச்சமயம், அம்மையார் வியாதியாயிருந்தார். அங்கு வந்த இருவரும் மரியாதைக்காகப் பேசாமல் இருந்தார் கள். இறுதியில் அம்மையாரே பேச ஆரம்பித்தார். ஏதாவது பேசும்படி ஹஸ்ரத் (Sufyan Thavri) ஸுப்யான் தவ்ரியைக் கேட்டுக்கொண்டார்.

ஹஸ்ரத் ஸுப்யான் தவ்ரீ:— ராபியாவே! உங்க ளுக்கு உண்டாயிருக்கிற இந்த வியாதியை நீக்கும்படி ஆண்டவனிடம் துஆ செய்கிறேன்.

ஹஸ்ரத் ராபியா:— இந்த வியாதி அல்லாஹ்வின் கட்டளையால் உண்டாகி இருக்கிறதென்று உங்களுக்குத் தெரியாதா?

ஹஸ்ரத் ஸுஃப்யான் :—ஆம், தெரியும்!

ஹஸ்ரத் ராபியா :—அவ்வாருனல் நேசனுடைய பிரியத்திற்கு மாற்றமாக நான் அவனிடம் எவ்வாறு முறையிடுவேன் ?

ஹஸ்ரத் ஸுஃப்யான் :— ராபியா! உங்களுக்கு இப்பொழுது எந்தப் பொருளில் ஆசையிருக்கிறது ?

ஹஸ்ரத் ராபியா :—ஸுஃப்யான் ! நீங்கள் அறிவாளி. ஆனல், இம்மாதிரியான பேச்சுக்கள் ஏன் பேசுகிறீர்கள்?

பன்னிரண்டு ஆண்டுகளாக புத்தம்புதிய பேரீச்சம் பழம் தின்னவேண்டுமென்று நான் ஆசை கொண்டிருக்கிறேன். இந்த பஸ்ரா நகரிலே பேரீச்சம்பழம் மலிவாக விற்கிறது. எங்கும் எப்பொழுதும் கிடைக்கிறது. ஆனல், நானே இதுவரை அந்தப் பழத்தை வாங்கி ருசி பார்க்கவேயில்லை. ஏனென்ருல், நான் அடிமையாயிருக்கிறேன். அடிமைக்கு ஆசை எதற்கு? நான் ஒன்றை விரும்புகிறேன். அதை ஆண்டவன் விரும்பவில்லையானல் எனது விருப்பம் ஆண்டவனை நிராகரித்தல் என்ற குப்ரில் கொண்டுவிடுமே !

ஹஸ்ரத் ஸுஃப்யான் :—நான் உங்களுடைய காரியங்களில் தலையிடமாட்டேன். தயவுசெய்து என் சம்பந்தமாக நீங்கள் ஏதாயினும் கூறுங்கள்.

ஹஸ்ரத் ராபியா :—நீங்கள் துன்யாவை நேசித்தீர்களானல் நல்ல மனிதராக இருப்பீர்கள்.

ஹஸ்ரத் ஸுஃப்யான் :—அது எவ்வாறு ?

ஹஸ்ரத் ராபியா :—உங்கள் சொற்களின்படியே !

ஹஸ்ரத் ஸுஃப்யான்:—(கண்ணீர் வடித்துக்கொண்டு) அல்லாஹ்வே ! என்மீது பிரியம் வைத்தருள்வாயாக !

ஹஸ்ரத் ராபியா :— உங்களுக்கென்ன, வெட்கமில்லையா ? நீங்கள் எவனுடைய பொருத்தத்தை நாடுகிறீர்களோ அவனிடம் நீங்கள் பொருத்தத்துடன் இல்லையே ?

## ஹஸ்ரத் மாலிக் பின் தீனர்

ஹஸ்ரத் ராபியாவின் இருப்பிடத்திலே ஓர் உடைந்த கோப்பை இருந்தது. அதை உபயோகித்து அம்மையார் ஒலு செய்வார், தண்ணீரும் குடிப்பார். ஒரு பழைய பாயும் இருந்தது. ஒரு செங்கல்லும் இருந்தது. இந்தச் செங்கல்லை அம்மையார் தமது தலையணையாக உபயோகிப்பார்.

இந்த நிலைமையைக் கண்டு நண்பர்கள் மனம் நொந்தார்கள். ஒருநாள் ஹஸ்ரத் மாலிக் பின் தீனர் அங்கு வந்தார். அம்மையாரின் மிக எளிய வாழ்க்கையைக் கண்டார் ! துக்கம் மேலிட்டது ! கண்ணீர் வடித்தார் !

ஹஸ்ரத் மாலிக் :—ராபியாவே ! எனக்கு அநேக பணக்கார நண்பர்கள் இருக்கிறார்கள். உங்களுக்குப் பிரியமானல் அவர்களிடமிருந்து உங்களுக்காக நான் ஏதாவது வாங்கிக்கொடுக்கிறேன்.

ஹஸ்ரத் ராபியா :—மாலிக் ! நீங்கள் பெரும் பிழை செய்துவிட்டீர்கள் ! எனக்கும் அந்தப் பெரும் பணக்காரருக்கும் உணவு அளிப்பவன் அல்லாஹ் என்று உங்களுக்குத் தெரியாதா ?

ஹஸ்ரத் மாலிக் :—ஆம், தெரியும்.

ஹஸ்ரத் ராபியா :—ஏழைகள் என்ற எண்ணத்திற்காக ஆண்டவன் ஏழைகளை மறந்திருக்கிருனு ? மேலும் பணக்காரர்களை—அவர்களுடைய பெரும் பணத்திற்காக—ஆண்டவன் மறக்காமல் இருக்கிருனு ?

ஹஸ்ரத் மாலிக் :—இல்லை ! இல்லை !

ஹஸ்ரத் ராபியா :—நமது நிலைமை அல்லாஹ்வுக்குத் தெரியும். ஆகையால், அதைப்பற்றி அவனுக்கு நினைவு படுத்தவேண்டிய அவசியமென்ன? அவனுக்கு எதில் பிரியமோ, அதிலே நமக்கும் பிரியம்.

## கறி தானாகவே சமையலாதல்

ஒருநாள் மாலைப் பொழுதிலே அம்மையாரிடம் ஹஸ்ரத் ஹசன் பஸ்ரீ சென்றார். அச்சமயம், அம்மையார் சமையல் செய்து கொண்டிருந்தார். சட்டியில் மாமிசத்தைப் போட்டு அடுப்பில் வைத்துவிட்டார். இருவரும் பேச ஆரம்பித்தார்கள். அடுப்பில் கறி இருப்பதை அம்மையார் மறந்துவிட்டார். இருவரும் மக்ரிப் (மாலை) தொழுகை தொழுதார்கள். தொழுகை முடிந்தது. ஒரு காய்ந்த ரொட்டியும் தண்ணீரும் எடுத்துக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தார்கள். அப்பொழுதுதான் சட்டியை அடுப்பில் வைத்த ஞாபகம் வந்தது. எழுந்து அம்மையார் சட்டியைப் பார்த்தார். ஆண்டவன் அருளால் கறி நன்றாகச் சமையலாகி இருந்தது! இருவரும் அதைச் சாப்பிட்டார்கள்! அவ்வளவு ருசியான கறி அவர்கள் அன்றுவரை சாப்பிடவில்லை!

## இரவெல்லாம் இறைவணக்கம்

ஒருநாளிரவில் பல பெரியோர்கள் அம்மையாருடன் இருந்தார்கள். அவர்களில் ஹஸ்ரத் ஸுப்யான் தவ்ரீ என்பவரும் ஒருவர்.

அம்மையார் தொழுகைக்காக நின்றார். மறுநாள் பொழுது விடியும்வரை நின்று தொழுதார். ஹஸ்ரத் ஸுப்யான் தவ்ரீ மற்றொரு மூலையில் உட்கார்ந்து ஆண்டவனது திருநாமங்களை உச்சரித்து. "திக்ர்" செய்து கொண்டிருந்தார். மறுநாட் காலையிலே, அம்மையார்,

"இரவு முழுதும் வணக்கம் செய்யும்படி ஆண்டவன் நமக்கு உதவினுன். அதற்காக நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டுமல்லவா? நன்றி செலுத்துதல் (ஷுக்ர்) செய்வதற்காக, நான் நோன்பு வைப்பேன்," என்ருர்.

அல்லாஹ்! அல்லாஹ்! இரவெல்லாம் நின்று தொழுது, பகலெல்லாம் நோன்பு வைப்பது இலேசான வேலையா? ஆண்டவனுடைய மெய்யடியார்கள் இத்தகைய வாழ்க்கையை நடத்தியிருக்கிருர்கள்! ஆனுல், காலையில் எழுந்து பத்து நிமிஷம் காலைத் தொழுகை தொழுவதற்கும் இல்லாத படுக்கைப் பிரியர்கள், காலைத் தூக்கத்தை வெறுத்து ஆண்டவன்பால் நேசம் கொள்வார்களா?

## இறந்த கோவேறு கழுதைக்கு உயிர் வந்தது

ஒரு சமயம், ஹஸ்ரத் ராபியா பஸ்ரீ, ஹஜ்ஜுக்குச் சென்றுகொண்டிருந்தார். அவரது சாமான்களை ஒரு கோவேறு கழுதை சுமந்துகொண்டு சென்றது. வழியில் அந்த மிருகம் இறந்துவிட்டது. வனந்தரத்தில் பயணஞ் செய்வோர் பலர் சேர்ந்து கூட்டமாகச் செல்வது வழக்கம். தனியாகச் சென்ருல் வழியில் பல சங்கடங்கள் நேரலாம். கள்ளர் பயம் ஒரு பக்கம். மணல் வெளியில் பாதை தவறிவிட்டால் தண்ணீரும் கிடைக்க முடியாமல் இறந்துபோக வேண்டிய நிலைமை ஏற்படும். ஹஜ்ஜுக்குச் செல்வோரும் வியாபாரக் கூட்டத்தாரும் ஒட்டகங்களுடனும், குதிரைகளுடனும், கோவேறு கழுதைகளுடனும் செல்வார்கள். இத்தகைய கூட்டத்திற்கு காபிலா (Qafila) அல்லது காரவான் (Caravan) என்பார்கள்.

ஹஸ்ரத் ராபியா பஸ்ரீயுடைய காபிலாவில் உள்ளோர் அந்த அம்மையாரின் கோவேறு கழுதை இறந்துவிட்ட

மையால் சாமான்களைத் தங்கள் பிராணிகள் மீது ஏற்றிக் கொண்டு அம்மையாரையும் அழைத்துக்கொண்டு செல்வ தாக விண்ணப்பஞ் செய்தார்கள். ஆனால், ஹஸ்ரத் ராபியா ஒப்புக்கொள்ளவில்லை. எனவே, அந்த காபிலாவைச் சேர்ந்தோர் அனைவரும் சென்றுவிட்டார்கள். ஹஸ்ரத் ராபியா மட்டும் மனித சஞ்சாரமில்லாத அந்த வனாந்தர வெளியிலே நின்றார். எங்கும் ஒரே பாலைவனம். தலைக்கு மேல் நீல நிற ஆகாயவெளி. திடீரென்று பிரசண்டமாருதம் அடித்தால், எத்தனையோ அடிகள் உயரத்தில் மணல் வந்து குவிந்து, அங்கு பதுங்கிப் படுத்திருக்கும் மனிதர்களையும் மிருகங்களையும் உயிருடன் புதைத்துவிடும். உயிர் பிழைத்தாலும், வழி தெரியாமல் தவிக்கவேண்டும். கானல் நீர் இருப்பதுபோலத் தோன்றும். வெகு கஷ்டப்பட்டு அங்குச் சென்றால், பார்த்ததெல்லாம் பொய்க்காட்சியாகி விடும். அப்பால், ஆகாரமும் தண்ணீரும் இல்லாமல், சோர்வடைந்து உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்.

இந்த நிலைமையில் ஹஸ்ரத் ராபியா பஸ்ரீ என்ன செய்தார்? அவல நிலையை நினைத்து அழுதாரா? கைகளைப் பிசைந்தாரா? கண்ணீர் வடித்தாரா? நெஞ்சம் துடித்துத் தரையில் விழுந்தாரா? இல்லை. ஆண்டவனை நம்பினோர் கைவிடப்படமாட்டார் என்ற உறுதிகொண்டோர் அவ்வாறெல்லாம் செய்யமாட்டார்கள். மெய்யடியார்களுக்குத் துன்பமும் துயரமும் வந்தகாலையில் அல்லாஹ்வின் மீது அவர்களது நம்பிக்கை அதிகமாகுமேயன்றி அணுவளவேனும் குறையாது. பொறுமையை மேற்கொண்டு, ஆண்டவனிடம் பிரார்த்தனை புரிவார்கள். இன்னக்க முஜீபுத் தஅவாத்—ஆண்டவனே! அழைப்போருக்கு மெய்யாகவே நீ (உடனடியாக) ஜவாப் சொல்வாய்—என்ற உண்மையை அறிந்தோர், அருளும் அன்பும்

நிறைந்த, கிருபாமூர்த்தியான அல்லாஹ்வையே நாடுவார்கள். இய்யாக்க நஅபுது—நாங்கள் உன்னையே வணங்குகிறோம்! இய்யாக்க நஸ்தயீன்—நாங்கள் உன்னிடமே உதவி தேடுகிறோம்! இஹ்திநஸ் = ஸிராத்தல் முஸ்தகீம்—எங்களுக்கு நேரான பாதையைக் காண்பித்து அருள்புரிவாயாக என்பார்கள்!

ஹஸ்ரத் ராபியா வானத்தை நோக்கினார். "அல்லாஹ்வே, நான் உன் வீடாகிய கஃபாவை நோக்கிச் செல்கிறேன். ஆனால், ஓர் ஏழையும் உதவியற்றவளுமான என்னுடைய கோவேறு கழுதையை நீ கொன்று விட்டாய்!" என்று ஆண்டவனிடம் முறையிட்டார்.

அவர் இவ்வாறு முறையீடு செய்து முடிக்கு முன் இறந்துகிடந்த அந்த கோவேறு கழுதை எழுந்து நின்று விட்டது! உடனே, ஹஸ்ரத் ராபியா பஸ்ரீ தமது சாமான்களை ஏற்றிக்கொண்டு, மக்காவை நோக்கிப் புறப்பட்டார். கூட்டாளிகளுடன் சேர்ந்துகொண்டார்.

## பேச்செல்லாம் குர்ஆன்

ஹஸ்ரத் ராபியா பஸ்ரீ, ஞான மார்க்கத்தில் உயர் நிலை (கமாலியத்) அடைந்த பிறகு குர்ஆனுடைய வசனங்களைத் தவிர, தமது நாவால் வேறொன்றையும் உச்சரிப்பதே இல்லை. கேட்கப்படும் கேள்விகளுக்கு குர்ஆன் வசனங்கள் மூலமாகவே மறுமொழி கூறுவது வழக்கம்.

இமாம் அஃலம் அபூ ஹனீபா ரஹ்மத்துல்லாஹி அலைஹியவர்களது மாணாக்கர் அப்துல்லாஹ் பின் முபாரக் ஒரு சமயம் மக்காவிலிருந்து மதீனா சென்று கொண்டிருந்தார். வழியில், ஹஸ்ரத் ராபியாவைச் சந்தித்தார். அப்பொழுது ஹஸ்ரத் ராபியா ஒரு மைதானத்தில் தனிமையாக உட்கார்ந்திருந்தார். அச்

சமயம் இருவருக்கும் வெகு விசித்திரமான சம்பாஷணை நடந்தது. இதில் ஹஸ்ரத் ராபியா பஸ்ரீயின் மறு மொழிகள் அனைத்தும் திரு குர்ஆன் வசனங்களாகவே இருப்பதை நோட்டமிடுக.

அப்துல்லாஹ் :—அஸ்ஸலாமு அலைக்கும், வ ரஹ்மத் துல்லாஹி வ பரகாத்துஹு !

ராபியா பஸ்ரீ :—ஸலாமுன் கவ்லுன் (ம்) மிர் ரப்பிர் ரஹீம். (அருள்நிறைந்த இறைவனிடமிருந்து) ஸலாம் வார்த்தையாயிருக்கிறது.

அப்துல்லாஹ் :—ஆண்டவன் உங்கள்மீது கிருபை செய்வானாக! இங்கு என்ன செய்கிறீர்கள் ?

ராபியா பஸ்ரீ :—"எவனை அல்லாஹ் வழி தவறும் படி செய்துவிடுகிறானோ, அவனுக்கு வழிகாட்டுவோர் ஒருவருமிலர்."

அப்துல்லாஹ் :–(வழி தவறி வந்துவிட்டார் என்று நினைத்து) எங்குப் போகிறீர்கள் ?

ராபியா பஸ்ரீ :—ஸுப்ஹானல்லதீ அஸ்ரா பி அப் திஹி லய்லன் மினல் மஸ்ஜிதில் ஹராமி இலல் மஸ்ஜிதில் அக்ஸா=தனது அடிமையை மஸ்ஜிதுல் ஹராமி(கஃபாவி) லிருந்து மஸ்ஜிதுல் அக்ஸா (பைத்துல் முகத்தஸ்) வுக்குக் கொண்டுசென்ற அல்லாஹ் புனிதமானவன்.

அப்துல்லாஹ் :—(ஹஜ் செய்துவிட்டு பைத்துல் முகத்தஸ் போகிறார் என்று நினைத்து) எப்பொழுது முதல் நீங்கள் இந்த இடத்தில் இருக்கிறீர்கள் ?

ராபியா பஸ்ரீ :—தலாத லயாலின் ஸவிய்யா=மூன்று இரவுகள் முழுதும்—அதாவது மூன்று நாட்களாக.

அப்துல்லாஹ் :—உங்களிடம் உணவு இருப்பதாகத் தெரியவில்லையே! நீங்கள் என்ன சாப்பிட்டீர்கள் ?

ராபியா பஸ்ரீ :—ஹு¯வ யுத்இமுனீவ யஸ்கீன் = அவனே எனக்கு உணவு அளிக்கிருன். அவனே எனக்கு நீர் கொடுக்கிருன்.

அப்துல்லாஹ் :—நீங்கள் எப்படி வலூ செய்தீர்கள் ?

ராபியா பஸ்ரீ :—பலம் தஜிதூ மாஅன் ப தயம்மமூ ஸயீதன் தய்யிபன் = மேலும், உங்களுக்கு நீர் கிடைக்காவிட்டால் சுத்தமான மண்ணுல் தயம்மம் செய்து கொள்ளுங்கள்.

அப்துல்லாஹ் :—என்னிடம் ஆகாரம் இருக்கிறது. சாப்பிடுகிறீர்களா ?

ராபியா பஸ்ரீ :—தும்ம அதிம்முஸ் ஸிமாம இலல் லய்லி = பிறகு இரவு வரை நோன்பைப் பூர்த்தியாக்குங்கள்.

அப்துல்லாஹ் :—இது ரமலான் மாதமில்லையே !

ராபியா பஸ்ரீ :—ப மன் தத்தவ்வஅ கைரன் ப இன்னல்லாஹ் ஷாகிருன் = நபிலாக எவராயினும் நல்ல செயல் செய்தால் அல்லாஹ் ஏற்றுக்கொள்கிருன், தெரிந்துகொள்ளுகிருன்.

அப்துல்லாஹ் :—பிரயாணத்தில் நோன்பு வைக்க வேண்டிய அவசியமில்லையே !

ராபியா பஸ்ரீ :—வ அன் தஸூமூ கைருன் (ல்) லகும் இன்குன்தும் த அலமூன் = நீங்கள் அறிவீர்களானுல், நீங்கள் நோன்பு வைத்தல் உங்களுக்கு நன்மையே.

அப்துல்லாஹ் :—நான் உங்களிடம் சாதாரண வார்த்தைகளில் பேசுவதைப்போல நீங்கள் ஏன் என்னுடன் பேசுவதில்லை ?

ராபியா பஸ்ரீ :—மா யல்பிலு மின் கவ்லின் இல்லா லதய்ஹி ரகீபுன் அமீத் = அதன்மேல் இரகசிய அறிவிப் பாளன் ஒருவன் இல்லாமல் வாயிலிருந்து ஒரு வார்த்தை யேனும் வெளியாவதில்லை.

அப்துல்லாஹ் :—நீங்கள் எந்தக் கோத்திரத்தைச் சேர்ந்த மாது ?

ராபியா பஸ்ரீ :—வ லா தக்பு மா லய்ஸ லக பிஹி இல்முன் இன்னஸ் ஸம்அ வல் பஸ்ர வல் பு ஆதா குல்லு உலாயிக கான அன்ஹூ மஸ்ஊலா.

ஏதாயினும் ஒரு விஷயத்தைப்பற்றி உனக்குத் தெரியாவிட்டால், மெய்யாகவே, காது, கண், மனம் இவை யாவும் கேள்வி கேட்கப்படும்.

அப்துல்லாஹ் :—நான் பிழை செய்துவிட்டேன் மன்னியுங்கள்.

ராபியா பஸ்ரீ :—லா தத்ரீப அலைக்குமுல் யவ்ம யக்பிருல்லாஹூ லகும் = உம்மீது குற்றமில்லை. இன்று அல்லாஹ் உமது பாவங்களை மன்னிப்பானாக !

அப்துல்லாஹ் :—நான் என் ஒட்டகத்தில் உட்கார வைத்துக்கொண்டு போகிறேன். வருவீர்களா ?

ராபியா பஸ்ரீ :—வ மா தப்அலூ மின் கைரின் யஃலம்ஹூல்லாஹூ = மேலும் நீங்கள் (நன்மையான) செயல்கள் செய்தால், அவற்றை அல்லாஹ் அறிகிறான்.

அப்துல்லாஹ் :—(தமது ஒட்டகத்தை உட்கார வைத்து) வாருங்கள் !

ராபியா :—குல் லின் முஃமினீன யகுல்லூ மின் அப் ஸாரிஹிம் = "உங்கள் கண்களை மூடிக்கொள்ளுங்கள்," என்று நம்பிக்கைகொண்டோர் (முஃமின்கள்) இடம் நீர் கூறும்.

அப்துல்லாஹ் :—(தமது கண்களை மூடிக்கொண்டு) ஏறிக்கொள்ளுங்கள் !

ராபியா பஸ்ரீ ஒட்டகத்தில் ஏறி உட்கார முயற்சி செய்யும்பொழுது ஒட்டகம் பயந்து எழுந்தது. ராபியா பஸ்ரீயின் போர்வை கிழிந்துவிட்டது, அப்பொழுது ராபியா பஸ்ரீ கூறியதாவது :

வமா அஸாபகும் மிம் முஸீபதீன் ப பிமா கஸபத் அய்தீகும் = உனக்கு நேர்ந்த கஷ்டம் உனது கையால் ஏற்பட்டதாகும்.

அப்துல்லாஹ் :—கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். நான் என் ஒட்டகத்தைக் கட்டிவிடுகிறேன். பிறகு நீங்கள் அதன்மேல் உட்காருங்கள்.

ராபியா பஸ்ரீ :— (Fa Fahhamna) ப பஹ்ஹம்னா ஸுலைமான = நாம் ஸுலைமானுக்கு அறிவித்தோம்.

அப்துல்லாஹ் :—(ஒட்டகத்தைக் கட்டிய பிறகு) இப்பொழுது ஏறி உட்கார்ந்துகொள்ளுங்கள்.

ராபியா பஸ்ரீ :—(ஒட்டகத்தின் முதுகில் ஏறி உட்கார்ந்துகொண்டு),

ஸுப்ஹானல்லதீ ஸ்க்கர லனா, ஹாதா வமா குன்னா லஹு முக்ரினீன். வ இன்னா இலா ரப்பினா வ முன்கலிபூன் = இதை நமது வசப்படுத்திய அல்லாஹ் பரிசுத்தமானவன். அதற்கு நாம் தகுதியற்றவராயிருந்தோம். மேலும், மெய்யாகவே நாம் நமது இறைவனிடம் கவனம் செலுத்துவோராக இருக்கிறோம்.

அப்துல்லாஹ் :—தமது ஒட்டகத்தின் கயிற்றைப் பிடித்துக்கொண்டு விரைவாக நடந்தார். ஆரவாரஞ் செய்தார்.

ராபியா பஸ்ரீ :—வக்ஸித் பீ மஷ்யிக் வக்லுல் மின் ஸவ்திக = உங்கள் நடையை மெல்லினமாக்குங்கள். உங்கள் குரலைக் குறைத்துக்கொள்ளுங்கள்.

அப்துல்லாஹ் :—இதைக்கேட்டு மெல்ல மெல்ல நடந்தார். இனிய இசையிலே தாழ்ந்த குரலிலே சில பாடல்கள் பாட ஆரம்பித்தார்.

ராபியா பஸ்ரீ :—வக்ரவூ மா தயஸ்ஸர மினல் குர்-ஆன் = குர்ஆனிலிருந்து (போதுமானதை) ஓதுங்கள்.

அப்துல்லாஹ் :—அல்லாஹ் உங்களுக்குப் பல மேன்மைகள் அளித்திருக்கிறான்.

ராபியா பஸ்ரீ :—வமா யத் தக்கரு இல்லா உலுல் அல்பாப் = அறிவுள்ளோர் தவிர பிறர் அறிந்துகொள்வதில்லை.

அப்துல்லாஹ் :—(கொஞ்ச தூரம் சென்ற பிறகு) உங்களுக்குக் கணவர் உண்டா?

ராபியா பஸ்ரீ :—யா அய்யுஹல்லதீன ஆமனூ லா தஸ்அலூ அன்அஷ்யாஅ இன் தப்தலகும் தஸ்ஊகும் = நன்னம்பிக்கை கொண்டவர்களே! வெளியாகிவிட்டால் உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கக் கூடிய விஷயங்களைப் பற்றிக் கேட்காதீர்கள்.

## முதுமையும் முடிவும்

இந்தப் புனித அம்மையாரின் வாழ்க்கை முடிவடையும் சமயத்திலே, தம்மைச் சூழ்ந்திருந்த மக்களை நோக்கி, "இங்கிருந்து எல்லோரும் வெளியே போய்விடுங்கள். ஆண்டவனுடைய தூதருக்கு இடம் விட்டுவிடுங்கள்," என்றார்.

உடனே அங்கிருந்தோர் அனைவரும் வெளியே சென்றுவிட்டார்கள். கதவுகள் தாளிடப்பட்டன.

அப்பொழுது,

"யா அய்யுஹந் நப்ஸுல் முதமயின்னு! அர்ஜிஇலா ரப்பிக=இளைப்பாறுதலில் அமைதியாயிருக்கும் திருப்தி கொண்ட ஆவியே! உனது கர்த்தாவிடம் திரும்புவாயாக"

என்று ஓர் அழைப்புக் குரல் கேட்டது! அப்பால் சிறிது நேரம் அமைதி நிலவியது.

வெளியே இருந்தவர்கள் உள்ளே வந்தார்கள். ஹஸ்ரத் ராபியா பஸ்ரீ அம்மையாரின் ஆவி ஆண்டவனிடம் சென்றுவிட்டது!

ஹிஜ்ரி 135 (கி. பி. 752)ல் அம்மையாரின் உலக வாழ்க்கை இவ்வாறு முடிவடைந்தது. அவரது இறுதியானது இவ்வளவு சீக்கிரம் வந்துவிடும் என்று அவருடனிருந்தோர் நினைக்கவில்லை. அமரச் சுடர் அணைந்தது. அன்றுவரை எலும்புக் கூட்டில் சிறைப் பட்டிருந்த உயிரானது அன்று, விடுதலைபெற்று எல்லையற்ற இன்பப் பெருவெளியில் கலந்து, பைத்துல் முகத்தஸின் கிழக்கிலுள்ள ஸைதா என்னும் குன்றில் அவரது உடலம் அடக்கம் செய்யப்பட்டது.

ஹஸ்ரத் ராபியா பஸ்ரீயின் வாழ்க்கையானது ஆத்மீக உயர்வு பெற்றதாகும். அம்மையார் வரும்வரை ஹஸ்ரத் ஹஸன் பஸ்ரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹா தங்களது சன்மார்க்கப் பிரசங்கங்களை ஆரம்பிக்கமாட்டார். ஹஸ்ரத் ஸுல்தான் இப்ராஹீம் பின் அத்ஹம் போன்ற அவ்லியாக்கள் இந்த அம்மையாரைச் சந்திப்பதைத் தமக்கொரு சிறப்பாக எண்ணினார்கள். இருளடைந்த எத்தனையோ உள்ளங்கள் அம்மையாரது தொடர்பினால்,— ஆத்மீக ஒளிவீசும் வாழ்க்கையினால்,—ஒரு புனிதப் பார்

வையால்—மெய்யொளியில் மிதக்க ஆரம்பித்து, ஆத்ம சுகம் பெற்றன.

ஹஸ்ரத் ராபியா பஸ்ரீயின் புனித வாழ்க்கையானது நமது பெண்மணிகள் ஆத்மீக உயர்வடைவதற்கு உறு துணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. மாதாவின் பாதத்தின் அடியிலே சுவர்க்கம் இருக்கிறதென்று எம் பெருமானார் முஹம்மத் முஸ்தபா ஸல்ஸல்லாஹு அலைஹி வ ஆலிஹி வஸல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினர் கள். ஓர் இனம் முன்னேற்றமடைய வேண்டுமானல் அதன் தாய்மார்கள்—பின்வரும் சந்ததியைப் பெற்று வளர்த்துப் பக்குவப்படுத்தும் அன்னைமார்கள்—நல்லவர் களாய் இருத்தல் வேண்டும். பட்டாடைகளும், பவுடர் பூச்சும், சீப்பும், சிங்காரமும், ஆபரணங்கள் அணியும் ஆசையும் மாதரை நல்ல தாய்மார்களாக மாற்றிவிட முடி யாது. அல்லது, திரு குர்ஆனும் பெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களது புனித வாழ்க்கை நெறியும் அறியாமலும், அவற்றைத் தினந்தோறும் தமது வாழ்க்கையில் செயலளவிலே பின்பற்ருத—மேனுட்டு நடையுடை பாவனைகளைக் குருட்டுத்தனமாய் காப்பியடிக் கிற—கல்வி முறையாலும் மாந்தர் உயர்வுபெற முடியாது. குர்ஆனும் ஸுன்னத்தும் கலந்த, ஆத்மீகக் கல்வியே மாந்தருக்கு மிகமிக அவசியமாகும். அல்லாஹ்வின் அருள் பெறுவதற்கும், இறைநேசச் செல்விகள் ஆவதற்கும் ஏற்றதாக நமது பெண்களின் கல்வி அமையவேண்டும். அத்தகைய கல்விபெற்ற தாய்மார்களுடைய குழந்தைகள், தாய்மார்களைப்போலவே இறைநேசராவார்கள்.

வருங்கால மக்களுக்குத் தாய்மார்களாக அமைந்த நமது மாதர்கள் ஹஸ்ரத் ராபியா பஸ்ரீ ரஹ்மத் துல்லாஹி அலைஹாவின் வாழ்க்கை வரலாற்ருல், தமது

ஆன்மாக்களை உயர்வு பெறும்படி செய்து, வருங்கால மக்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்வார்களா ?

" உங்களில் எவர் ஆண்டவனிடம் பயபக்தி (தக்வா) யுடன் இருக்கிறார்களோ, அவர்களே அல்லாஹ்விடம் மேலானவர்கள் " என்பதை மறந்துவிடாமல், " இஸ்லாம் மார்க்கத்தில் செயல் (அமல்) என்பதே மேன்மையின் அளவுகோல் " என்பதை நினைவில் வைத்துக்கொண்டு, அல்லாஹ்வின் தூய்மையான வணக்கத்திலே அவனல்லாத எதையும் கலந்துவிடாமல், அவன் ஒருவனுடைய உதவியையே விரும்பி, அவன் ஒருவனையே வழிபட்டு, வாழ்க்கை நடத்துவார்களா ?

ஹஸ்ரத் காலித் பின் வலீத் ரலியல்லாஹு அன்ஹு போன்ற ஆண்டவன் பாதையில் உயிரை அர்ப்பணஞ் செய்யத் தயாராகும் வீரர்களையும், ஸையிதினா பிலால் ரலியல்லாஹு போன்ற எம்பெருமானாரது மெய்க் காதலர்களையும், " எத்தகைய இடர்கள் வந்தாலும் குர்ஆன் கட்டளைகளையும், பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஆலிஹி வஸல்லமவர்களது பெருவழியும் புறக்கணிக்கமாட்டேன் " என்ற ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு போன்ற உறுதியாளரையும், ஹஸ்ரத் உமர் பின் கத்தாப்போன்ற சாலச் சிறந்த நிர்வாகிகளையும், அரசியல் ஞானிகளையும், மக்கள் பணியாற்றும் தலைவர்களையும், ஹஸ்ரத் உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு போன்ற இஸ்லாத்திற்காக செல்வமனைத்தையும் அள்ளிக்கொடுக்கும் தனவந்தர்களையும், ஹஸ்ரத் அலீ ரலியல்லாஹு அன்ஹு போன்ற ஞானாசிரியர்களையும் பெற்று, வளர்த்துப் பக்குவப்படுத்துவார்களா ? தாய்மார்களே ! அல்லாஹ் அல்லாத எதையும் உங்கள் உள்ளங்களிலிருந்து வெளியேற்றுங்கள் ! அப்பால், உங்கள் உள்ளங்களை ஆத்மீக ஒளியால்

நிரப்புங்கள்! ஆண்டவனுடைய மெய்யொளியால் உங்கள் வாழ்க்கையை நலம்பட நடத்துங்கள்! ஆண்டவன் அருளால், உங்கள் குழந்தைகளும் உயர்வடைவார்கள்.

அல்லாஹு ம்ம! ஆதிநு பித் துன்யா ஹஸனதன் வ பில் ஆகிரதி ஹஸனதன்.

இறைவனே! இவ்வுலகிலே மேலானவற்றையும், மறு உலகிலே மேலானவற்றையும் எங்களுக்குத் தந்தருள் வாயாக! ஆமீன்.

முடிவுரை

தொழுகையில் அந்தஹியாத்திலே

"அஸ்ஸலாமு அலைனு வ அலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் = எங்கள் மீதும், அல்லாஹ்வின் அடியார் களில் உத்தமர்கள் மீதும், ஸலாம் (சாந்தி) உண்டாவ தாக" என்று நாம் ஓதுகிறோமல்லவா?

மன் யுதிஇல்லாஹ வர் ரஸூல ப உலாயிக ம அல்ல தீன அன் அமல்லாஹு அலைஹிம் மினன் நபிய்யீன, வஸ் ஸித்தீகீன, வஷ் ஷுஹதாயி, வஸ் ஸாலிஹீன, வ ஹஸுன உலாயிக ரபீகா = நபிமார்களிலிருந்தும், சத்தியவான்களிலிருந்தும், தியாகசீலர்களிலிருந்தும், உத் தமர்களிலிருந்தும் ஆண்டவனால் சன்மானிக்கப்பட்டவர் களுடன், அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் வழிபட்டு நடப் பவர்கள் சேர்ந்திருப்பார்கள். மேலும், இவர்களே (இறை வனுடைய) அழகான தோழர்கள்."

குர்ஆன் அந்நிஸா-பெண்கள் 4 : 69

அல்லாஹ்விடம் கலப்பில்லாத விசுவாசங்கொண்டு நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர் கள்மீது அபிமானங்கொண்டு, பக்தி வணக்கமுள்ளவர்

(முத்தகீன்) களாக இருப்போர் அல்லாஹ்வுடைய நண்பர் (அவ்லியாக்)கள். இறைவா! இத்தகைய பாதையிலே உன் அடியார் அனைவரும் நடக்கும்படி அருள் புரிவாயாக! ஆமீன்.

பொன்மொழிகள்

1. உனது உள்ளம் விழிப்படையும்படி முயற்சிசெய். அவ்வாறு உள்ளம் விழிப்படைந்துவிட்டால், நேசன் (அல்லாஹ்) உடைய நாட்டம் இராது. அதாவது, விழிப்படைந்த உள்ளம் என்றால் அல்லாஹ்வின் நேசத்திலே தன் உள்ளத்தை இழந்துவிடுவதாகும். அழியாத நித்திய ஜீவனில் இழக்கப்பட்ட உள்ளமே "பனாபில்லாஹ்" (Fanah Fillah) அல்லாஹ்வில் அழிந்துவிடுவதாகும்.

2. ஆண்டவன் உனக்கு சுகம் கொடுக்கும்பொழுது நன்றி செலுத்து. உனக்குத் துன்பம் வரும்போது பொறுமையுடன் இரு.

3. நீர்மேல் நடப்பதும், ஆகாயத்தில் பறப்பதும், இறை தொண்டரின் அடையாளமாகா. சிறு மீனும் நீரில் மிதக்கிறது. சிறு ஈயும் ஆகாயத்தில் பறக்கிறது.

4. உலகின் பாசம் நிறைந்தவனே உலகத்தாரின் நன்மை தீமைகளைப்பற்றிப் பேசுவான். உலகப் பற்றை முற்றும் அகற்றியவனுடைய உள்ளத்தில் உலகின் நன்மை தீமைகளுக்கு இடமேயில்லை.

5. எனக்கு இன்று சுவர்க்கத்தில் ஆசை உண்டாயிற்று. "நான் அல்லாத, வேறு வஸ்துவின் மீது நீ ஏன் விருப்பங் கொண்டாய்?" என்று என் நேசன் (அல்லாஹ்) என்மீது கோபமடைந்தான் — அதனால்தான் இப்பொழுது எனக்கு வியாதி வந்தது" என்று ஹஸ்

ரத் ராபியா பஸ்ரீ ஒரு சமயம் வியாதியடைந்த பொழுது கூறினர்.

6. உலகம் எத்தன்மையது? அதில் வசிப்போர் எத்தகையோர்? உலகம் ஓர் பிணம். அதில் வசிப்போரும் நய வஞ்சகர்களே.

7. இறைநேசம் என்னும் கோட்டையின் கதவு எப்பொழுதும் திறந்தே இருக்கிறது. அங்குச் செல்வோரைத் தடுப்பார் ஒருவருமிலர். ஆனல், அங்குச் செல்லத் தகுதியுடைய உள்ளத்தை உண்டாக்கிக்கொள்வோர் வெகு சிலரே.

## இறைவனிடம் ராபியா அம்மையாரின்

# பிரார்த்தனை

எனது மெய்யான அன்பனே! நாளைக்கு என்னை நீ நரகத்திற்கு அனுப்புவாயானல், நான் உன்னுடைய இரகசியத்தை வெளியாக்கி விடுவேன். எனவே, ஆயிரம் ஆண்டுகள் நரகம் தனது வேலையைச் செய்யாமல் இருந்துவிடும். நீ எனக்காக வைத்திருக்கும் உலக சம்பத்துக்களை எனது எதிரிகளுக்குக் கொடுத்துவிடு. மறு உலகில் எனக்காக நீ வைத்திருக்கும் பேறுகளை உன் மெய்யடியார்களுக்கு அளித்து விடு. என் உள்ளத்தின் உண்மையான ஆவலெல்லாம் நரகத்தின் அச்சத்தால் நான் உன்னை வணங்கினல், என்னைப் பெரு நரகில் தள்ளி விடு. சுவர்க்கத்திற்காக நான் உன்னை வணங்கினல், எனக்கு அந்தச் சுவர்க்கம் கிடைக்காமல் செய்துவிடு.

ஆனல், உனக்காகவே உன்னை நான் வணங்குவேனயின், 'ஜமால்' என்ற அழகிய ஜோதியால் எனக்கு இன்பம் அளிப்பாயாக!

நான் உன்னையே நாடுகிறேன். நீ அல்லாதவற்றில் எனக்கு நேசமே இல்லை. உன் பிரியப்படி செய். உன் பிரியமே என் பிரியம். உன் ஆசைப்படியே அமைந்துவிடுகிறேன்.

இம்பீரியல் அச்சகம்
பெரியகம்மாளத்தெரு, திருச்சி-58

7B
8-23

**ஸையித் இப்ராஹீம்** எம். ஏ., எல். டி.,
ஜமால் முஹம்மத் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

## எழுதிய நூல்கள்

| | | | ரூ. பைசா |
|---|---|---|---|
| 1. | முஹம்மத் (ஸல்) பரிசுப் பதிப்பு | | 3 — 00 |
| | ,, மலிவுப் பதிப்பு | | 1 — 90 |
| 2. | ஹஸ்ரத் அபூ பக்ர் | (ரலி) | 1 — 50 |
| 3. | ,, உமர் | ,, | 1 — 50 |
| 4. | ,, உஸ்மான் | ,, | 1 — 50 |
| 5. | ,, அலீ | ,, | 1 — 90 |
| 6. | ,, காலித் பின் வலீத் | ,, | 1 — 50 |
| 7. | ,, ஸல்மான் பார்ஸி | ,, | 0 — 75 |
| 8. | ,, பிலால் | ,, | 0 — 62 |
| 9. | ஸுல்தான் ஸலாஹுத்தீன் | | 1 — 00 |
| 10. | தளபதி தாரிக் பின் ஜியாத் | | 0 — 75 |
| 11. | உத்தமர் உமர் | | 0 — 75 |
| 12. | ராபியா பஸ்ரீ | (ரஹ்) | 0 — 75 |
| 13. | இமாம் அபூ ஹனீபா | ,, | 0 — 62 |
| 14. | இமாம் கஸ்ஸாலீ | ,, | 1 — 00 |
| 15. | மன்ஸூர் ஹல்லாஜ் | ,, | 1 — 00 |
| 16. | இக்பாலின் முறையீடும் மறுமொழியும் | | 0 — 75 |
| 17. | இஸ்லாம் காட்டிய அரசியல் | | 1 — 00 |
| 18. | உலகம் போற்றும் உத்தம நபி | | 1 — 00 |
| 19. | இஸ்லாமியக் கதை விருந்து | | 0 — 75 |
| 20. | முஸ்லிம் கதைக்கொத்து | | 0 — 50 |
| 21. | அண்ணல் நபி | | 0 — 50 |
| 22. | முஸ்லிம் வீரப்பெருமக்கள் | | 1 — 00 |

**வளர்மதி பதிப்பகம்**
தென்னூர், ❋ திருச்சிராப்பள்ளி.

இம்பீரியல் அச்சகம், திருச்சிராப்பள்ளி—1959.